2016 ஜீன் 28
செவ்வாய்
விலை: 15/-

ஹிஜ்ரி 1437 ரமழான் பிறை 22 ■ பக்கங்கள் 12 ■ மணி 02 ■ ஒளி 98

NAVAMANI DAILY නවමණී දිනපතා

# நவமணி

தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

1996 - 2016 நவமணி




முஸ்லிம்களை ஒடுக்குவதில் பர்மா, இஸ்ரேல் ஒற்றுமை 06»

உள்ளே ரமழான் முபாறக் பரிசு மழை நவமணி



கால்பந்து அரங்கிலிருந்து விடைபெற்றார் மெஸ்ஸி 12»






# ஞானசார தேரருக்கு எதிராக வழக்கு

“ முஸ்லிம் அமைப்புகள் ஜனாதிபதி, பிரதமர் கவனத்துக்கு கொண்டுசென்றன ”

## ஆர்.ஆர்.ரி. அமைப்பு நடவடிக்கை

■ ஆதில் அலி சப்ரி

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரரின் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களை வெறுப் பூட்டும் பேச்சு தொடர்பாக முஸ் லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்கா உட்பட ஏனைய முஸ்லிம் அமைப்புகள், முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுத் துள்ளனர்.

மேலும், ஆர்.ஆர்.ரி. சட்டத்தர ணிகள் அமைப்பு ஞானசார தேரரின் செயற்பாடு தொடர்பாக வழக்கொன்றையும் 11»

## மத்திய வங்கி ஆளுநராக எரான்?

■ அ.அருண் பிரசாந்த்



மத்திய வங்கியின் அடுத்த ஆளுநராக பிரதியமைச்சர் எரான் விக்கிரமரத்னவின் பெயரை ஐக்கிய தேசியக் கட்சியினர் பரிந்துரைத்துள்ளதாக செய்திகள் வெளியாகி யுள்ளன.

மத்திய வங்கி யின் ஆளுநராக தற்போது பணியாற் றிவரும் 11»

## ஜூலை 07, 08இல் பெருநாள் விடுமுறை வழங்கவும்

### அமைச்சர் ஹலீம் வேண்டுகோள்



■ இக்பால் அலி

ரமழானை முன்னிட்டு விடுமுறை வழங்கப்பட்ட முஸ்லிம் பாடசாலைகளுக்கு தொடர்ந்தும் எதிர் வரும் ஜூலை மாதம் 7, 8ஆம் திகதிகளிலும் விடு முறை வழங்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு முஸ் லிம் சமய கலாசாரம் மற்றும் தபால் துறை அமைச் சர் எம்.எச்.ஏ. ஹலீம் வேண் டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஜூலை 7ஆம் திகதி பாடசாலை ஆரம் பிக்கப்படவுள்ளதால் சில நேரம் பிறை தென்படாமல் விட்டால் அன்றைய தினம் நோன்புப் பெருநாள் தின மாக இருக்கலாம். 11»

## அல்அக்ஸா பள்ளியில் அட்டகாசம்»



இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு படையினர் பலஸ்தீனின் மஸ்ஜிதுல் அக்ஸாவில் ரமழான் மாத மத கிரியைகளில் ஈடுபட்டி ருந்த முஸ்லிம்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக 7 பலஸ்தீனியர்கள் காயமடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிறன்று மஸ்ஜிதுல் அக்ஸா வுக்குள் இஸ்ரேலிய குடியேற்றவாசிகள் மற்றும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு படை யினர் நுழைந்தமைக்கு எதிர்ப்புத் தெரி வித்து ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


கடந்த 6ஆம் திகதியில் இருந்து இதுவ ரையில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு இராணு வத்தினர் 330 11»

## 1 இலட்சம் மரக்கன்று நடும் திட்டம் ஆரம்பம்



■ சுஐப் எம். காசிம், அஷ்ரப் ஏ. சமத்

தேசிய கூட்டுறவு வாரத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதி யில் ஒரு இலட்சம் மரக்கன்றுகளை நடும் வேலைத்திட்டம் கைத்தொழில், வர்த்தக அமைச்சின் முடிவுக்கிணங்க நேற்று 11»



## இன வெறுப்பு பேச்சுகளுக்கு எதிராக தனிநபர் பிரேரணை



■ பீ.எப்.எம். றிஷாட்

இனவாத பேச்சுகளை தடை செய்வதற்கான தனி நபர் பிரேரணையொன்றை கொழும்பு மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் விரைவில் கொண்டு வரவுள்ளார்.

அத்துடன் கடந்த வாரம் மஹியங்கனையில் பொது பல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் முஸ்லிம்க ளுக்கு எதிராக இனவாதத்தை தூண்டும் விதத்திலான கருத் துக்களை வெளியிட்டுள்ள நிலையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார். 11»






## சம்பூர் அனல்மின் திட்டம் கைவிடப்பட்டது

### திரவ எரிவாயு நிலையம் அமைக்கப்படும்

■ அ.அருண் பிரசாந்த்

சம்பூரில் அனல் மின் உற்பத்தி நிலையத்துக்கு பதிலாக திரவ எரிவாயு மின் உற்பத்தி நிலையமொன்றை ஸ்தாபிக்க அரசு தீர்மானித் துள்ளது என்று மின்சக்தி மற் றும் எரிசக்தி பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா தெரி வித்தார்.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருவதா கவும் அவர் நேற்றுக் குறிப் பிட்டார்.

சம்பூரில் அனல் மின்உற் பத்தி நிலையம் ஒன்றை நிர்மாணிக்க அரசு 11»

## ஐ.தே.கவில் இணைகிறார் சரத் பொன்சேகா



அமைச்சரான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா ஐக்கிய தேசி யக் கட்சியுடன் எதிர்வரும் 30ஆம் திகதியன்று இணை யவுள்ளார் என்று தெரியவந் துள்ளது.

இதுதொடர்பில் கடந்த 25 ஆம் திகதி முக்கிய கலந்துரை யாடல் ஒன்று இடம்பெற் றுள்ளது என்றும் இதி லேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள் ளது என்றும் அறி யக்கிடைத்துள் ளது. 11»

## ஹஜ் வழக்கு ஒத்திவைப்பு



■ ஆதில் அலி சப்ரி

உயர்நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்படவிருந்த ஹஜ் 11»

# புதுக்கட்சி அமைத்தால் ஐ.தே.கவுக்கே வெற்றி நிச்சயம்



## சு.கவிலிருந்து பிரிவோருக்கு சுதர்ஷனி எச்சரிக்கை

(இஸ்மதுல் றஹுமான் நீர்கொழும்பு நிருபர்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முடியுமானளவு அவசரமாக வைக்குமாறு ஜனாதிபதியை பலவந்தப்படுத்துவதாகக் கூறிய நகர திட்டமிடல் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் டாக்டர் சுதர்ஷனி பெர்ணான்டோபுள்ளே ஸ்ரீ.ல.சு. கட்சியிலிருந்து பிரிந்து புதிய கட்சியொன்றை உருவாக்குவதை வன்மையாக கண்டிப்பதாகவும் புதிய கட்சியை உருவாக்கினால் அது ஐ.தே.க.வையே வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்லும் எனவும் கூறினார்.

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்ணாண்டோபுள்ளே கட்டான வெலிஹேனயில் அமைந்துள்ள தனது வீட்டில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேல் மாகாண அமைச்சர் லலித் வணிகரத்ன, கட்டான பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் மற்றும் 8 உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்த ஊடக சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்ணாண்டோபுள்ளே தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றங்களைக் கலைத்து ஒரு வருடமும் சில மாதங்கள் கடந்து விட்டன. அரசியலில் கீழ் மட்டத்தில் மக்களுடன் நேரடி தொடர்புள்ளவர்கள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினராவர். இதனை அடிமட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சிக்கல்களை எதிர்நோக்குகிறோம். எனவே, முடியுமானவரை அவசரமாக உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பலவந்தப்படுத்தி கேட்டுக் கொள்வதாக கூறினார்.

வட்டார எல்லை நிர்ணயத்தில் சில பிரச்சினைகள் எழுந்துள்ளதனால் தேர்தல் காலதாமதமாகுவதாக தெரிகிறது. இருந்தாலும் இப்பிரச்சினையை கூடிய சீக்கிரம் தீர்த்து தேர்தலை நடத்த வேண்டும்.

புதிய கட்சி அமைப்பது தொடர்பாக நாம் எமது கடுமையான எதிர்ப்பை தெரிவிக்கிறோம். சகல தரப்பும் ஒன்றுபட்டு ஸ்ரீ.ல.சு.க கீழ் தேர்தலில் போட்டியிட வேண்டும். புதிய கட்சி அமைத்து தேர்தலில் போட்டியிட்டால் ஐ.தே.கட்சிக்கே வெற்றிவாய்ப்பு அதிகம்

எமது நாட்டின் அரசியல் வரலாற்றில் 3ம் நிலை கட்சிகளை உருவாக்கியவர்கள் தோல்வியையே தழுவிய வரலாறு உள்ளது. எனவே, ஸ்ரீ.ல.சு.க பிரிக்க முனைய வேண்டாம். கருத்து முரண்பாடுகளை களைந்து ஒன்றிணைந்து கட்சியை வெற்றிப்பாதைக்கு இட்டுச்செல்ல வேண்டும் என்றார்.

நல்லாட்சியில் இணைந்துள்ள கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து போட்டிபோட முன் வந்தால் என்ன செய்வது எனக் கேட்டபோது, கட்சி முறையில் ஸ்ரீ.ல.சு.க. தனித்தே போட்டியிடுவதற்கு கட்சி முடிவெடுத்துள்ளது எனக் கூறினார்.

புதிய நிறம், புதிய இலட்சினையுடன் கட்சி ஆரம்பிக்கப் போகிறார்கள். மஹிந்த ராஜபக்ஷ கட்சியின் முன்னாள் தலைவர். அவரை நாம் கௌரவிக்கிறோம். ஆனால், அவர் தோல்வியடைந்த பின்னர் கட்சியின் தலைமை பொறுப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒப்படைத்தார். அவர்தான் தற்போது கட்சியின் தலைவர். எனவே, கட்சியை உடைத்து வேறு கட்சிகளுக்கு வெற்றியை கொடுக்க முனைய வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

மேல் மாகாண அமைச்சர் லலித் வணிகரத்ன உரையாற்றுகையில், மே தினத்தன்று காலியிலும் கிருளப்பனையிலும் ஒன்றுகூடிய சனக்கூட்டத்தை ஒன்றுசேர்த்தால் ஸ்ரீ.ல.சு.கட்சியே வெற்றி பெறும். ஐ.தே.க வெற்றிபெற முடியாது. இதனை உணர்ந்து கட்சியை உடைக்காமல் ஒன்றிணைந்து கட்சியை பலப்படுத்த வேண்டும் என்றார்.

# ஹபுகஸ்தலாவை அரசாங்க வைத்தியசாலைக்கு அமைச்சர் ஹக்கீம், பைசல் காசிம் நேரடி விஜயம்





(ஹபுகஸ்தலாவை நிருபர்)

கொத்மலை ஹபுகஸ்தலாவை அரசாங்க வைத்தியசாலையில் நிலவும் நீண்டகால குறைபாடுகள் தேவைகள் தொடர்பாக கலந்துரையாடி தீர்வு காண்பதற்காக அண்மையில் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், பிரதி அமைச்சர் பைசல்காசிம், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.நயீமுல்லாஹ் உட்பட மத்தியமாகாண சுகாதார அதிகாரிகள் ஆகியோருடன் ஹபுகஸ்தலாவை அரசாங்க வைத்தியசாலைக்கு நேரடி விஜயம் ஒன்றினை மேற்கொண்டு பார்வையிட்டதுடன் இவ்வைத்தியசாலை தொடர்பாக ஹபுகஸ்தலாவை வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தினால் கையளிக்கப்பட்ட மகஜர் இதன்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நோயாளர்களுகளுக்கு மருத்துவப் பரிசோதனைகளுக்காக வருவோருக்குமான மேலதிக உட்கட்டமைப்பு மற்றும் கட்டட வசதிகளுடன் வைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதன் அவசியம் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வைத்தியசாலையினை தரமுயரத்துவதிலும் அதனை அபிவிருத்தி செய்து தருவதிலும் கூடுதல் கவனம் செலுத்தும்படி மாகாண பணிப்பாளரை அமைச்சர் ரவூப் ஹக்கீம் கேட்டுக்கொண்டதும் உங்களது கோரிக்கைகளை நிறைவேற்றித்தருவதில் தமது தனிப்பட்ட அவதானத்தினை செலுத்துவதாகவும் அவசர சிகிச்சைப்பிரிவை அமைப்பதோடு தேவைப்படும் வைத்திய உபகரணங்களை அவசரமாக வழங்குவதாக குறிப்பிட்ட பணிப்பாளர் ,அவர்கள் மேலதிக வசதிகள் தொடர்பில் நேரடியாக மதிப்பீடொன்றினை செய்துதரும்படி மாகாண பிரதிப்பணிப்பாளர்களிடம் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் அன்றைய தினமே மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.நயீமுல்லாஹ்வுடன் ஹபுகஸ்தலாவை அரசாங்க வைத்தியசாலைக்கு விஜயம் செய்த மத்திய மாகாண பிரதி சுகாதாரப்பணிப்பாளர் வைத்திய அதிகாரி ஹம்தான் வைத்தியசாலை பொறுப்பதிகாரி அயோமி, ஊர் பிரமுகர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடியதோடு தேவைப்படும் கட்டட அமைப்புக்கான வசதிகள், உபகரணங்கள் குறித்தும் அறிக்கை ஒன்றினை தயார் செய்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. மேற்படி மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்ற கூட்டத்தில் மத்திய மாகாண வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்காக 1500 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1970 ஆரம்பிக்கப்பட்ட ஹபுகஸ்தலாவை மத்திய வைத்தியசாலை அமைப்பதற்கான காணியை ஹபுகஸ்தலாவை பகுதி மக்களின் மனதில் என்றும் நீங்காத இடம்பதித்த சமூக சேவையாளர் காலம் சென்ற ஐ.எல். எம்.சஹீத் தமது சொந்த நிதியில் வாங்கி வழங்கியமை நினைவுபடுத்தப்பட வேண்டிய மிகமுக்கிய நிகழ்வாகும்.

# வயிற்றுவலிக்கு வைத்தியசாலை சென்ற சிறுமி குழந்தை பிரசவிப்பு

15 வயது சிறுமி ஒருவருக்கு திடீரென கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டதினை அடுத்து அவரின் தந்தை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். இதன்போது அச்சிறுமி குழந்தை ஒன்றினை பிரசவித்துள்ள சம்பவமொன்று நாவலப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சிறுமி சில காலங்களுக்கு முன்னர் கண்டிப் பகுதியில் மிளகுத்தூள் பொதிசெய்யுமிடத்தில் வேலை செய்த சந்தர்ப்பத்தில் இளைஞன் ஒருவருடன் காதல் தொடர்பு கொண்டிருந்துள்ளார். ஆனால் குறித்த இளைஞனின் தொலைபேசி எண்ணைத் தவிர வேறு எந்த விபரங்களையும் அறிந்திருக்கவில்லையென பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மேற்படி சம்பவம் குறித்து சிறுமியின் பெற்றோரால் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டினையடுத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நெல்லை உத்தரவாத விலைக்கு வாங்குமாறு விவசாய அமைச்சரிடம் வேண்டுகோள்

(திகாமடுல்ல நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் இன்னும் ஓரிரு வாரங்களில் நெல் அறுவடை இடம்பெறவுள்ளதனால் விவசாயிகளின் நெல்லை அரசாங்கம் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அக்கரைப்பற்று மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்பாளர் எம்.ஐ.அபூசஹீட் விவசாய அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் பல கமநலப்பிரிவுகளில் நெல் அறுவடைக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். அக்கரைப்பற்று மத்திய மற்றும் கிழக்கு கமநலப்பிரிவுகளில் சுமார் 35,000 ஏக்கரில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப் பகுதிகளில் சுமார் 02 வாரங்களில் நெல் அறுவடை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் மூலம் கிடைக்கும் நெல்லை அரசாங்கம் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கீடுகளை செய்ய வேண்டும். தனியார் நெற் கொள்வனவாளர்கள் குறைந்த விலைக்கு நெல்லை கொள்வனவு செய்வதற்கு முன்னர் அரசாங்கம் நெல்லை உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்வதன் மூலம் விவசாயிகளைப் பாதுகாக்க முடியும்.

கடந்த வருடம் அரசாங்கம் ஒரு விவசாயிடமிருந்து இரண்டரை ஏக்கரில் (2 லீ ) உற்பத்தி செய்யப்பட்ட நெல்லை மாத்திரமே கொள்வனவு செய்து வந்தது. இதனால் அதற்கு கூடுதலான ஏக்கரில் நெல் உற்றபத்தி செய்த விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். தற்போதைய நல்லாட்சி அரசில் ஒரு விவசாயிக்கு 05 ஏக்கர் விவசாய செய்கைக்கு பசளை மானியம் வழங்கியது. இதனைக் கருத்திற்கொண்டு ஒரு விவசாயிடமிருந்து 05 ஏக்கரில் உற்பத்தி செய்யப்படும் நெல்லை அரசாங்கம் கொள்வனவு செய்யுமாறும் அறுவடை ஆரம்பம் முதல் உத்தரவாத விலைக்கு நெல்லை கொள்வனவு செய்யுமாறும் விவசாய அமைச்சரிடம் அக்கரைப்பற்று மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்பாளர் எம்.ஐ.அபூசஹீட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# முஸ்லிம்களுக்கும் பௌத்தர்களுக்குமிடையிலான உறவு தொடர்ந்தும் நீடிக்க வேண்டும்

## மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க





(வத்துகாமம் நிருபர்)

மத்திய மாகாண முதலமைச்சர் ஒழுங்கு செய்த நோன்பு துறக்கும் மாகாண இப்தார் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கண்டி மஹய்யாவை காட்டுப் பள்ளியில் இடம்பெற்றது.

இவ்வைபவத்தில் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, மாகாண சபை அங்கத்தவர்களான செய்னுள் ஆப்தீன் லாபிர், ஹிதாயத் சத்தார், மாத்தளை மாநகர சபைத் தலைவர் ஹில்மி கரீம், அக்குறணை பிரதேசசபையின் முன்னாள் தலைவர் ஏ.எம்.எம்.சிம்சான், கண்டி சிட்டி பள்ளிவாயல்கள் சம்மேளனத் தலைவர் கே.எம்.எம். சித்தீக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தெரிவு செய்யப்பட்ட பள்ளிவாயல்களுக்கு நன்கொடை வழங்கும் வைபவமும் இங்கு இடம் பெற்றது. இவ்வைபவத்தில் முதலைமச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்ததாவது-

இலங்கை முஸ்லிம்களும், பௌத்த மக்களும் தொண்டு தொட்டு பரஸ்பரம் மிக நெருக்கமாக வாழ்ந்து வருகின்றனர். அவ்வப்போது ஏற்படக்கூடிய சிறு சம்பவங்கள் புறக்கணிக்கத்தக்கன. இவ்விரு சமூகங்களுக்குமிடையிலான உறவுகள் தொடர்ந்து வளருதல் வேண்டும். அதே நேரம் அவை பாதுக்காக்கப்படவும் வேண்டும். மத்திய மாகாணத்தில் மிக நீண்டகாலமாக நான் முஸ்லிம் கல்வி அமைச்சுக்கான பொறுப்பில் இருந்து வருகிறேன். அந்த அடிப்படையில் முஸ்லிம் சமூகத்திற்கு என்னால் ஆற்ற முடிந்த பணிகள் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். முஸ்லிம் சமூகத்திற்கும் இலங்கை சிங்கள மக்களுக்குமிடையிலான உறவை மேலும் பலப்படுத்த வேண்டும். அந்த வகையில் முதலமைச்சர் என்ற வகையில் முஸ்லிம் கல்விக்கு மட்டுமன்றி சமய கலாசார ரீதியிலும் என்னால் பல சந்தர்ப்பங்களில் உதவ முடிந்துள்ளது.

முஸ்லிம் சிறுவர்களது சமய விவகாரங்களுக்கு வழிகாட்டியாக அமைந்த அஹதியா வகுப்புக்கள் கண்டி மாவட்டத்தில் சிறப்பாக இயங்கி வருகின்றன. அந்த அடிப்படையில் இலங்கையிலே அரச உதவியுடன் அமைக்கப்பட்ட முதலாவது அஹதியாப் பாடசாலை என்று கூறும் வத்தேகெதரை அஹதியாப் பாடசாலைக் கட்டிடம் மத்திய மாகாண சபையால் அமைத்துக் கொடுக்கப்பட்டதாகும்.

அது மட்டுமல்லாது அஹதியா ஆசிரியர்களுக்கான பயிற்சிகளையும் வழங்கி வருகிறோம். முஸ்லிம்களுக்கு மிக முக்கிய காலமாக இந்த ரமழான் அமைந்துள்ளது. எனவே அவ்வாறான ஒரு சிறப்பு மிக்க காலத்தில் நாட்டைக்கட்டி எழுப்பும் பணியில் நாம் அனைவரும் இணைந்து எமது பங்களிப்பை வழங்குவோம். முதலமைச்சின் முஸ்லிம் சமய விவகாரங்களுக்கான இணைப்பாளர் றசீட் எம்.றியாழ் இவ்வைபவத்தை ஒழுங்கு செய்திருந்தார்.

# அகில இலங்கை தமிழ்தினபோட்டிக்கு கெகிராவையிலிருந்து 7 மாணவர்கள்

(கலாவெவ நிருபர்)

அகில இலங்கை மட்ட தமிழ் மொழித்தினப் போட்டிக்கு கெகிராவ கல்வி வலயத்திலிருந்து ஏழு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் இவர்களுக்கான போட்டி நிகழ்ச்சிகள் ஜூலை மாதம் 10 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது

பிரிவு 01 பேச்சுப் போட்டியில் நேகம முஸ்லிம் மகா வித்தியாலய எம். எஸ். துபைல் அகமட் பிரிவு 02 கட்டுரை வரைதல் ஹோராப்பொல முஸ்லிம் வித்தியாலய ஆர். எம். ருஸ்தி பிரிவு 03 பாவோதல் நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலயம் எம். ஜே. கதீஜா பிரிவு 04 சிறுகதை ஆக்கம் ஹோராப்பொல முஸ்லிம் வித்தியாலயம் எம். எச். எப். இல்மா இலக்கணம் போட்டி கெகிராவ முஸ்லிம் மகா வித்தியாலயம் எம். என். எப். சஹ்ரா பிரிவு 05 இலக்கணப் போட்டி ஜாயா முஸ்லிம் மகா வித்தியாலயம் ஏ. டி. இஸ்ரா குறுநாடக ஆக்கம் கெகிராவ முஸ்லிம் மகா வித்தியாலயம் ஏ. ஆர். எப். மபாஸா ஆகியோர் மாகாண மட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று அகில இலங்கை மட்டப் போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளனர்.

# பஸ் விபத்தில் 27 பேர் காயம்

(வத்துகாமம் நிருபர்)

பிபிலைப்பிரதேசத்தில் இடம் பெற்ற பஸ் விபத்தில் 27 பேர் காயமடைந்துள்ளனர். நேற்றுமுன்தினம் பள்ளம் ஒன்றில் கட்டுப்பாட்டை மீறி மேற்படி பஸ் வண்டி வீழ்ந்துள்ளது. பஸ்ஸில் பயணித்த 22 பேர் காயமடைந்து பிபிலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிபிலை சேனாபத்திய என்ற இடத்தில் இவ்விபத்து இடம் பெற்றுள்ளது. விபத்து தொடர்பாக பிபிலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



# கொழும்பில் அரச காணிகள் பற்றிய தகவல் திரட்ட பணிப்பு

## அமைச்சர் மனோ கணேசன்



வடகொழும்பு, மத்திய கொழும்பு தொகுதிகள் உள்வரும் கொழும்பு பிரதேச பகுதியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி சபை, தேசிய வீடமைப்பு அதிகாரசபை, துறைமுக அதிகாரசபை, கொழும்பு மாநகரசபை, மாவட்ட செயலகம் ஆகிய அரச அமைப்புகளுக்கு சொந்தமான மற்றும் பயன்படுத்தபடாத தனியார் காணிகள் தொடர்பான விபரங்களை திரட்டும்படி கொழும்பு மாவட்ட எம்பியும், அமைச்சருமான மனோ கணேசன், கொழும்பு பிரதேச செயலக பிரதேச செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பு பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டம், இணைத்தலைவர்களான அமைச்சரவை அமைச்சர்கள் மனோ கணேசன், ரவி கருணாநாயக்க, பிரதியமைச்சர் ஏ.எச்.எம். பௌசி ஆகியோர் தலைமையில் கொழும்பு கோட்டை பிரிஸ்டல் வீதி கலாநிதி அஞ்சலோ மண்டபத்தில் நடைபெற்றது.

அதன் போதே அமைச்சர் மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

கொழும்பு மாநகரத்தில் வாடகை வீடுகளில் வசிக்கும் மத்திய தர மற்றும் குறைந்த வருமான பிரிவு மக்களின் வீட்டு பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்று தரும் நோக்கில் பாரிய வீடமைப்பு திட்டங்களில் முதலீடு செய்ய உள்நாட்டு, வெளிநாட்டு தனியார் துறையினர் தயாராக இருப்பதால், உரிய காணிகளை அடையாளம் காண வேண்டிய தேவையை தானும், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவும் உணர்ந்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வாடகை வீடுகளில் வாழ்கின்ற மக்களை வாழ்நாள் முழுக்க வாடகை செலுத்திக்கொண்டே, மாறி, மாறி வீடுகளை தேடி அலைந்து திரிய விட அப்படியே முடியாது என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். எனது அமைச்சில் ஏற்படுத்தப்பட்டுள்ள விசேட பிரிவில் வீட்டு தேவை கொண்டோரின் தகவல்கள் திரட்டப்படுகின்றன.

பொருளாதார இயலுமைகளுக்கு பொருந்தி வரும் விதத்தில், புதிய வீடமைப்பு திட்டங்களை அமைக்கவும், அவற்றில் முதலீடு செய்யவும் அரசு மற்றும் தனியார் நிதி வாய்ப்புகள் இப்போது ஏற்பட்டு உள்ளன. எனவே உரிய காணிகளை அடையாளம் காண வேண்டிய பணியை இப்போது ஆரம்பித்து உள்ளோம் என அமைச்சர் மனோ கணேசன் சுட்டிக்காட்டினார்.

# பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்க கோரிக்கை



மேல் மாகாணத்தில் ஆசிரியர்களுக்கான பரீட்சையில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, இலங்கை ஆசிரியர் சேவையாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த பரீட்சைகள் இடம்பெற்று இரண்டு வருடங்களாகின்ற போதும், அவர்களுக்கு நியமனம் வழங்க, நிதி அமைச்சின் முகாமைத்துவ திணைக்களம் அனுமதியளிக்கவில்லை எனவும் இதேவேளை, இந்த நியமனங்களை வழங்க தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என, நிதி அமைச்சுக்கு வலியுறுத்தி, மேல் மாகாண பட்டதாரிகள் ஒன்றியத்துடன் இணைந்து பேரணி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் தற்போது குறித்த பேரணி கொழும்பு - கோட்டையில் ஆரம்பமாகி நிதி அமைச்சு வரை செல்ல முற்பட்டுள்ளமையால், லோட்டஸ் டவர் ஆரம்ப பகுதியில் பொலிஸாரால் தடைகள் போடப்பட்டிருந்தது. இதனால் அப் பகுதியில் கடும் வாகன நெரிசல் நேற்றைய தினம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# படகு கவிழ்ந்ததில் இருவர் பலி

அநுராதபுரம், பண்டாரபுலன் குளத்தில் படகொன்று கவிழ்ந்ததில் காணாமல் போன இளைஞரினதும், யுவதியினதும் சடலங்கள் மீட்கப்பட்டன.

குறித்த இருவரும் இன்றைய தினம் திருமணப் பந்தத்தில் இணைந்துகொள்ள இருந்ததாகவும், இளைஞன் அநுராதபுரத்தை சேர்ந்தவர் என்றும், யுவதி பொலன்னறுவையைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் உதவியுடன் குறித்த இருவரின் சடலங்களும் நேற்று காலை மீட்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்ததோடு, நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் குறித்த குளத்தில் படகோட்டச் சென்ற 21 வயதான இளைஞர் மற்றும் 19 வயதான யுவதியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புளுமெண்டல் பகுதியில் மக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு - புளுமெண்டல் பகுதியில் நேற்று பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

புளுமெண்டல் பகுதியிலுள்ள எரிபொருள் விநியோக குழாய்க்கு மேலாக வீடுகளை நிர்மாணித்துள்ள மக்களை வெளியேறுமாறு ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் அறிவித்திருந்தனர்.

குறித்த வீடுகள் நேற்றைய தினம் உடைக்கப்படும் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளதாகவும், தமக்கான நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் வரை தாம் இந்த பகுதியை விட்டு வெளியேற போவதில்லை என அந்த பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மேலும் குறித்த இடத்திற்கு அமைச்சர் மனோ கணேசன், பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஆகியோரும் சென்று மக்களிடம் கலந்தாலோசித்தனர்.

# சாலாவ வெடி விபத்தில் 304 பேருக்கு நஷ்டஈடு

கொஸ்கம, சாலாவை இராணுவ முகாம் வெடிப்பு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 304 பேருக்கு இதுவரை நஷ்டஈட்டு பணம் வழங்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட செயலாளர் சுனில் கன்னங்கர தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் நாட்களுக்குள் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நஷ்டஈட்டு பணம் வழங்கும் நிகழ்வானது நிறைவடைந்துவிடுவதோடு, குறித்த வெடிப்பு சம்பவத்தினால் சொத்துக்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் தொடர்பிலான பூரண மதிப்பீட்டு அறிக்கையானது இதுவரை நிறைவுபடுத்தப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும் முழுமையாக அல்லது பகுதியளவில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட 854 வீடுகள்,வர்த்தக நிலையங்களின் மதிப்பீட்டு அறிக்கையானது தற்சமயம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், அதற்கமையவே குறித்த நஷ்டஈட்டு பணங்கள் வழங்கப்படுவதாகவும் கொழும்பு மாவட்ட செயலாளர் சுனில் கன்னங்கர குறிப்பிட்டார்.

# தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை பரீட்சை ஜூலையில்

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வகுப்புக்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கான தடைத்தாண்டல் பரீட்சை ஜூலை மாதம் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் நடைபெற உள்ளது.

அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் அரச நிர்வாக சுற்றறிக்கை இல 16/2016 மற்றும் ஒன்றிணைந்த சேவை சுற்றறிக்கை இல. 04/2016 அடிப்படையில், ஒன்லைன் முறையின் மூலம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.




NAVAMANI DAILY
நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com

28TH JUNE 2016 - TUESDAY

# முதலமைச்சர் ஆளுநர் பனிப்போரில் கிழக்கின் அபிவிருத்திக்கு தடை

கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் நஸீர் அஹமதுக்கும் மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்குமிடையே நிகழ்ந்து வரும் பனிப்போர் மாகாணத்தில் அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாகவுள்ளது.

கடந்த மாகாண சபை அமர்வில் பேசிய முதலமைச்சர் ஆளுநரின் ஒத்துழைப்பு இன்மையால் மக்கள் அபிலாஷைகளை முன்னெடுக்க முடியாதிருப்பதாகத் தெரிவித்தார்.

மாகாண சபை முறையில் ஆளுநரே பிரதான நிர்வாகியாவார். மாகாண சபை எடுக்கும் தீர்மானங்கள் ஆளுநர் அங்கீகரித்தால் மட்டுமே அமுலுக்கு வரும்.

நாட்டின் ஏனைய மாகாண சபைகளில் சுமுகமாக நிர்வாகம் நடக்கின்ற போதும் கிழக்கு மாகாண சபையில் மாகாண சபையின் இரு பிரதானிகளுக்குமிடையே நிகழும் அதிகாரப்போட்டி காரணமாக மாகாண சபை செயற்பாடுகளில் தடைகள் ஏற்பட்டுள்ளன. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். முதலமைச்சர் அண்மையில் தனது ஆதங்கத்தை மாகாண சபை அமர்வில் வெளியிட்டிருந்தார்.

தற்போது கிழக்கு மாகாண சபையால் எந்தச் சேவையையும் சரியாக செய்யமுடியாத இக்கட்டான நிலையை ஆளுநர் உருவாக்கியுள்ளார்.

நாங்கள் இந்தச் சபையிலே பல தீர்மானங்களை எடுத்த போதும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அவர் தடையாகவுள்ளார்.

இம்மாகாணத்திலுள்ள வேலையற்றபட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்காமல் முடக்கி மாகாண சபையில் ஆட்சியைக் கேள்விக் குறியாக்கியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பின்னணியில் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் தமது கடமையைச் செய்வதற்கு ஆளுநர் முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமென்று அவர் கேட்டுள்ளார்.

மாகாண முதல்வரின் இக்குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளித்துள்ள ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மாகாணத்தின் அபிவிருத்திக்கு தனது உச்ச ஆதரவினை வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

கடற்படை உத்தியோகத்தர்களுடன் நடந்த மோதலில் மன்னிப்புக்கேட்ட பிறகு முதலமைச்சர் தொடர்பாக எழும் விமர்சனங்கள் காரணமாக இதனைத்திசை திருப்புவதற்காகவே தனக்கு எதிராக விமர்சனங்களை எழுப்புவதாக ஆளுநர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சருக்கும் ஆளுநருக்குமிடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடு நல்லாட்சி அரசின் பயன்களை கிழக்கு மாகாண மக்களுக்கு அனுபவிப்பதற்கு தடையாக உள்ளது. ஆளுநர் தனது அறிக்கையில் பட்டதாரி ஆசிரியர் நியமனம் தாமதம் தொடர்பாகவும் விளக்கியுள்ளார்.

ஆளுநர் எந்த விளக்கத்தைத் தெரிவித்தாலும் இப்போது கிழக்கு மாகாண சபையின் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை தொடர இடமளிப்பது கிழக்கு மாகாண அபிலாசைகளுக்கு போடும் தடையாகவே அமையும். எனவே இந்த நிலை நீடிக்க இடமளியாது ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாக தலையிட்டு கிழக்கு மாகாண சபையின் சீரான இயக்கத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆளுநருக்கும் முதலமைச்சருக்கும் இடையே தொடரும் பனிப்போருக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைப்பது அவசியமாகும்.

# தடம் மாறுகிறதா நல்லாட்சி அரசு?

**சட்டத்தரணி சந்திரசிரி செனவிரத்ன**
**தமிழில் - அமீர் ஹம்ஸா**

அர்ஜுன் மகேந்திரன், நல்லாட்சி அரசாங்கத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் ஒன்றாக இருந்து வந்தது. அந்த விவகாரம் தற்போது எல்லோரது நன்மை கருதி தீர்வுக்கு வந்திருக்கிறது. ஜனவரி 8ஆம் திகதி எதிர்பார்க்கப்பட்ட நல்லாட்சி இதுவா?

நீதியான சமூகமொன்றிற்கான தேசிய முன்னணி மற்றும் பிரசைகள் முன்னணி ஆகியவை மீண்டும் மீண்டும் கேள்வி எழுப்புவது இவ்வாறாகும். இதன் போது நாம் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவை விரட்டியடித்த போராட்டவரலாற்றுக்குச் செல்வோம். அந்தப் போராட்டத்தின் சுருக்கத்தை ஆராய்வோமேயானால் நிகழ்கால, எதிர்காலங்களுக்கு ஏற்றவாறான வழியொன்றினை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

மாதுலுவாவே சோபித தேரர் நல்லாட்சிக்கான போராட்டத்தை ஆரம்பித்தது நாட்டில் நேர்மை நியாயத்தை ஏற்படுத்துவதற்காகும். நாட்டில் நல்ல எதிர்காலமொன்றை உருவாக்கும் நோக்கிலாகும். இதற்காக அணியொன்றை உருவாக்கி தைரியமாக முன்னெடுத்து செல்லக்கூடிய தலைவரொருவர் இருக்கவில்லை. இதன் அர்த்தம் நாட்டில் அரசியல் ரீதியாக எதிர்கொள்ளக்கூடிய அணியொன்று இருக்கவில்லை என்பதல்ல. இதற்குக் காரணம் மஹிந்த ராஜபக்ஷவிடம் இருந்த இனவாத அதிபதிவாத சூதாட்டம் மிகவும் கொடூரமானதொன்றாக இருந்து வந்ததினாலாகும். அனைத்து சக்திகளும் சோபையிழந்து காணப்பட்டது. பல்வேறு காரணங்கள் தொடர்பில் அப்போதாகும் போது ஐ.தே.கவும் தலைவரொருவரை தேடிக் கொண்டிருந்தமை பாரதூரமான சந்தர்ப்பத்திலாகும். ராஜபக்ஷ பொறிமுறையின் கீழ் அனைத்து எதிரணி சக்திகளும் அங்கவீனமான நிலைமையிலே காணப்பட்டன. சோபித தேரரவர்கள் பொது வேட்பாளர் திட்டத்தை முன்வைத்தது இவற்றுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலாகும்.

நீதியான சமூகமொன்றிற்கான தேசிய அணியை உருவாக்குவதற்கான ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தை வாசிகசாலை சேவை சபையின் மண்டபத்தில் இடம்பெற்றது. கருஜயசூரிய, சரத் பொன்சேகா ஆகியோர் மாத்திரமன்றி ராஜபக்ஷவினரோடு இருந்த வாசுதேவ நாணயக்காரவும் இந்த ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டிருந்தார். அந்த பேச்சுவார்த்தையின் போது தாம் கலந்து கொண்டிருப்பது தனிப்பட்ட ரீதியிலே அன்றி அரசியல் கட்சி ரீதியாக அல்ல என்பதை கருஜயசூரியவும், வாசுதேவ நாணயக்காரவும் வலியுறுத்திக் கூறியிருந்தனர். அன்று ஹிருணிகா பிரேமசந்திரனும் இந்த ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டு உரையொன்றை ஆற்றியிருந்தார். அந்த சந்தர்ப்பத்தில் ஹிருணிகாவை வளைத்துப்பிடிக்கும் ராஜபக்ஷ நடவடிக்கை தொடர்ந்த வண்ணமிருந்தது. கூட்டத்தின் இறுதியில் ஒரு சிலர் ஹிருணிகா தொடர்பான இந்த விவகாரத்தை சோபித தேரருக்கு தெளிவுபடுத்தியிருந்தனர். இந்த சந்தர்ப்பத்தில் அவர் என்ன குறிப்பிட்டிருந்தார்?

"பரவாயில்லை, மனிதர்கள் வருவார்கள், போவார்கள். நாங்களும் போவோம். மஹிந்தவோடு இருப்பவர்களுக்கு இங்கு தடைவிதிக்கப்பட்டால் நோக்கத்தை அடைந்து கொள்ள முடியாமல் போகும். ஹிருணிகா போவதாக இருந்தால் போகட்டும். பார்ப்போம்" என்றார் சோபிததேரர். அடுத்தவாரம் பொலன்னறுவையில் சுதந்திரக் கூட்டமைப்பில் மேடையேறிய ஹிருணிகா அங்கு பாடலொன்றையும் இசைத்தார். இது 2013இல் நிகழ்ந்த சம்பவமாகும். 2015 ஜனவரியில் ஹிருணிகா மஹிந்தவுக்கெதிரான நிலைப்பாட்டிலே இருந்து வந்தார். ஆகஸ்ட் மாதம் ஹெல உருமயவின் முக்கிய கதாபாத்திரங்களான அதுரலியே ரதன தேரரும் பாடலி சம்பிக ரணவகவும் ஐ.தே. முன்னணியிலே தேர்தலில் போட்டியிட்டனர். இது அரசியல் நிகழ்வுகள் தொடர்பில் ஆராயும் போது சிறிய விடயமொன்றல்ல. இவ்வாறான விடயங்கள் நிகழ்வதற்குக் காரணம் நீதியான சமூகமொன்றிற்கான தேசிய முன்னணி அரசியலை தலைகீழாக மாற்றுவதற்கு மேற்கொண்ட முயற்சியாகும். இந்த அமைப்பிற்கு அவசியமாயிருந்தது மஹிந்தவை தோற்கடிக்கச் செய்து மற்றொரு பரம்பரைக்கு நாட்டைக் கையளிப்பதல்ல. நாட்டு நலனுக்காக பரம்பரையொன்றை உருவாக்குவதாகும். நாட்டை நீதி, நேர்மையான நாடொன்றாக ஆக்குவதாகும். இவ்வெதுவும் இதுவரை இடம்பெற்றதாக இல்லை. இன்றும் அவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றன. இவ்வாறான ஒரு நிலையில் தான் மைத்திரிபால சிறிசேனவை பொதுவேட்பாளராக ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவையும் ஏற்பட்டது.

ஜனவரி வெற்றி உறுதிப்படுத்தப்பட்டது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அடையாளம் நிலைநிறுத்தப்பட்டதனாலாகும். மைத்திரி முதல் அனைத்து அரசியல் வாதிகளும் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். நேர்மையான சமூகமொன்றிற்கான தேசிய முன்னணியென்பது ஒரு நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கையூடாக மனித நாகரீகத்தின் நம்பிக்கை ஏற்படத் தொடங்கியது. மஹிந்த ராஜபக்ஷவை வீழ்த்த முடியாதென்ற நம்பிக்கையே நிலவி வந்தது. அந்த நம்பிக்கையின் ஊடாக நிலைப்பாடொன்றும் நிலவி வந்தது. மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அடிவருடிகளும் திருடினாலும் தப்பில்லை என்பதே அந்த நிலைப்பாடாகும். இருண்ட நம்பிக்கையும் இருண்ட நிலைப்பாடும் சமூகத்தை, நாடொன்றை நாசமாக்குவது இவ்வாறாகும். இது தற்பாதுகாப்புக்கு விலங்குகளை பலி கொடுப்பதற்கு ஒப்பானதாகும். புத்த மதத்தின் படியும் களவெடுத்தால் தப்பில்லையென கூறுவது பாவமாகும்.

மஹிந்த களவெடுத்தால் பரவாயில்லையெனக் கூறுவது மஹிந்தவினர் திருடியதினாலாகும். இராணுவத்தினர் என்போர் குற்றச் செயல், தவறுகளிலிருந்து பாதுகாப்பு பெற்றுக்கொடுப்போராவர். நல்லாட்சியின் ஜனவரி வெற்றி அதற்கெதிரான நோக்கமுடையது. எனினும் நல்லாட்சிக்குள் நுழைந்து கொண்டு யுத்தத்தை வெற்றி கொண்டதென்பதற்காக திருடுவது தவறில்லையென கூறுவோரும் இருக்கிறார்கள். இது துரசணமாகும். இன்று சமூகத்தில் காணப்படும் பரஸ்பர எதிர்ப்பும் இதுவாகும். ஜப்பானுக்குச் சென்ற மஹிந்த ராஜபக்ஷ தமது குடும்பத்தவர்களுக்கு மாத்திரம் அரசியல் பழிவாங்கல் இடம்பெறுவதாக ஜப்பான் டைம்ஸ் பத்திரிகைக்கு குறிப்பிட்டிருந்தார். இதன் அர்த்தம் மஹிந்த திட்டத்தை சுருட்டிக் கொண்டிப்பதென்பதாகும். தொடர்ந்தும் இராணுவ அதிகாரிகளுக்கு முக்திப் பேறில்லை. அரசியல் பழிவாங்கல் என்பது மஹிந்த,

சிரந்தி, கோதா, பஷில், நாமல், யோசித போன்றோருக்கு எதிராக மாத்திரமாகும்.

லலித் வீரதுங்க, அனுஷ பல்பிட போன்றோரைப் பாதுகாப்பதற்கு இலங்கை நிர்வாக சேவை சங்கம் பொறுப்பேற்றிருக்கிறது.

நீதியான சமூகமொன்றிற்கான தேசிய முன்னணி மற்றும் பிரசைகள் சக்தி மீண்டும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கூட்டத்தொடர்களை ஏற்பாடு செய்தது ஜனவரி வெற்றியினால் எதிர்பார்க்கப்பட்ட எந்தவொரு விடயமும் இடம் பெறாததனாலாகும். மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டதனால் முழுநாடும் உத்வேகமடைந்திருந்தது. எனினும் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்கச் செய்த போதிலும் நாட்டில் அரசியல், நேர்மை துளியளவேனும் மாறியிருக்கிறதா, இந்தக் கேள்வியை யாரிடம் முன்வைக்க வேண்டும். குற்றச் செயல் தொடர்பாக குற்றச்சாட்டுக்கு உள்ளான அனுஷ பல்பிட ஊதியம் பெறுவது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அவரது வேலை பறிபோனது. திலின கமகே நீதவான் கதிரையிலிருந்து இறக்கப்பட்டார். இதுவும் சிவில் அமைப்புக்கள் கேள்வியெழுப்பியதனால் இடம்பெற்றது. எனினும் 2015 பெப்ரவரியிலிருந்து ஊழல் குற்றம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டு வருகின்ற அர்ஜுன் மகேந்திரன் தொடர்பில் ஏன் இந்தளவு அக்கறை...




மத்திய வங்கி ஆளுனரென்பது தமது அரசாங்கத்திலுள்ள ஊழியரொருவர் மாத்திரமே. இவரை அனுப்ப வேண்டியிருக்கின்ற ஒரு நிலைமையில் அமைச்சர்கள் கூட இவரை பாதுகாக்க முற்படுவது ஏன்? நல்லாட்சி தொடர்பிலான முக்கிய செயற்பாட்டாளர் மைத்திரிபால சிறிசேனா என்றே சிவில் அமைப்புக்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றன. பொது வேட்பாளராக மஹிந்தவை எதிர்கொண்டு மக்கள் காப்பாளனாக அபிசேகம் பூண்ட மைத்திரிபால சிறிசேன இது தொடர்பில் வெட்கப்படக் கூடும். இதன் போது சத்தியம் இதனைவிட வேறுபட்டதொன்றல்ல.

மஹிந்தவை தோற்கடிக்கச் செய்தது நீதியான சமூகமொன்றிற்கான தேசிய முன்னணி என்பதில் எந்த சந்தேகமும் கிடையாது. எனினும் மைத்திரிபால சிறிசேன நாட்டின் ஜனாதிபதியானது நீதியான சமூகமொன்றிற்கான தேசிய முன்னணியினால் அல்ல. அது தேர்தல் முடிவொன்றாகும்.

உல்லாசப் பிரயாண சபையில் நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டிருப்பது தொடர்பான விசாரணை முடிவடைந்திருக்கிறது. இந்த விசாரணையின் பின் இந்தக் குற்றத்தோடு தொடர்புபட்டவரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறிடம்பெறாமல் திருடனைக் காப்பாற்ற முடியுமா என மீண்டும் ஆராய்ந்து பார்க்கும் வகையில் குறித்த ஆவணக் கோவை மீண்டும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு மேற்கொண்டது மஹிந்த ராஜபக்ஷ அன்றி பிரதமர் அல்லது ஜனாதிபதியாவார். இதனை யார் செய்தாலும் அது சட்ட ஆதிபத்தியத்துக்காக சத்தியப் பிரமாணம் மேற்கொண்டுள்ள பிரதமர் அல்லது ஜனாதிபதியொருவருக்கு உகந்ததொன்றல்ல. பொது உடைமை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள லலித் வீரதுங்க, அனுஷ பல்பிடவுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்த முறை விகாரப்படுத்தலாகும். யார் மேற் கொண்டாலும் இது சிறு பிள்ளைத்தனமான செயற்பாடாகும். யானை திருடியமை தொடர்பாக கைது செய்யப்பட்ட உடுவே தம்மாலோக தேரருக்கு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தினால் பிணைவழங்க முடியாதெனக் கூறப்பட்டது. இதுவும் சிறுபிள்ளைத்தனமான அறிவிப்பாகும். இவ்வனைவரையும் வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்கு இரகசியப் பொலிஸுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் சிரந்தி ராஜபக்ஷவை கவனித்தது அவ்வாறல்ல. இதற்கு யார் தலையிட்டாரோ தெரியவில்லை.

கைதுக்குள்ளாகாமலிருப்பதற்கு நீதிபதி திலினகமகே அசிங்கமான முறையில் செயல்பட்டது சிலவேளை சிரந்தி ராஜபக்ஷவை கவனித்த முறை தொடர்பில் மனதில் இருந்த ஜொலியினாலாகக் கூடும். இங்கு இடம்பெற்றிருப்பது வழிகாட்டி, நின்று கொண்டு மேற்கொள்ளும் விடயத்தை கையாள் வீதியெங்கும் ஓடி ஓடி மேற்கொள்வதைப் போன்றாகும். மஹிந்தவுக்குப் பதிலாக மைத்திரி நியமனம் பெற்ற போதிலும் நாட்டு நிர்வாகம் குறிப்பிடத்தக்களவேனும் மாறுபடவில்லையெனக் கூறியது இதனாலாகும். இவ்வாறு தெளிவுபடுத்தியது வாக்குகளினால் மஹிந்த தோற்கடிக்கச் செய்யப்பட்ட போதிலும் இன்னும் மஹிந்த முறை நாட்டில் செயல்படுவதை உறுதிப்படுத்துவதற்காகும். விபரிக்கப்பட்ட சம்பவங்கள் நல்லாட்சிப் பொறுப்பாளர்கள் நாட்டை பார்த்துக் கொள்ளும் முறைக்கு சாட்சியாகின்றன. இவை அனைத்தும் சட்டம் இன்னும் செத்துக் கொண்டிருப்பதையே சுட்டி நிற்கின்றன.

நாம் மஹிந்த ஆதரவாளர்களது அரசாங்கத்தின் பக்கம் கவனம் செலுத்துவோம்.


ஜனவரி வெற்றி எவருக்கும் அறுதியான ஒன்றல்ல. மைத்திரியுடன் ஸ்ரீல.சு.கவின் ஒரு சிலர் நல்லாட்சியில் ஒன்றிணைந்து இணக்கப்பாடொன்றுக்கு வந்தனர். ஜனவரி வெற்றி எதிர்பார்த்த விடயங்கள் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் இல்லை. இது நல்லாட்சியின் மற்றுமொரு திரிபுபடுத்தலாகும். பசு குட்டியீன்ற போதிலும் எஞ்சியிருப்பது தாய்ப்பசு மாத்திரமே. கன்றுக்குட்டியை யாரோ திருடிச் சென்றிருக்கிறார்கள். ஜனவரி சூரபித்தெனவிடமிருந்து பால் கறப்பது உரிமையாளர் அல்ல. கன்றுக்குட்டிகள் விலங்கிடப்பட்டு ஜொன்ஸ்டன், பஷில், சஜின்வாஸ், கம்மன்பில போன்றோர்கள் நீதிமன்றம் சென்று கைவிலங்கைக்காட்டி சிரிக்கின்றார்கள். குற்றச்சாட்டுக்கு உள்ளான அனுரயாபா, டிலான் பெரேரா அமைச்சர்களாகி இருக்கிறார்கள். இப்போது நிறைவேற்றதிகாரத்தை ஒழிப்பதற்கு ஸ்ரீல.சு.க.வினர் எதிர்ப்பெனக் கூறுகிறார்கள். ஒரு வருடத்துக்குள் இருமுறை ஸ்ரீல.சு.கட்சியை புறக்கணித்த மக்கள் நல்லாட்சி, நல்லிணக்கம் தொடர்பில் ஆர்வம் காட்டினர். தற்போதைய இணக்கமும் அவ்வாறான தொன்றாகும். இந்த திரிவுபடுத்தலானது ரணில் விக்கிரமசிங்கவின் படி என்னமோ ஒன்றாகும்.

எனவே மைத்திரியிடம் பாரிய பொறுப்புள்ளது. நல்லாட்சிப் போராட்டம் 2015 டிசம்பர் 09ஆம் திகதி கண்டியில் ஆரம்பமானது. அன்று தான் ஜனாதிபதியாகி ஸ்ரீல.சு.கவோடு நல்லிணக்க அரசாங்கமொன்றை உருவாக்குவதாக கூறினாரென்றால் இன்று இருப்பது ஜனாதிபதி மஹிந்தவேயன்றி மைத்திரி அல்ல. கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப் போன்று சிவில் அமைப்பின் வரலாறு தொடர்புபடுவது இதிலிருந்தாகும். பாடல் இசைப்பதற்காக மஹிந்தவிடம் சென்ற ஹிருணிகா மீண்டும் திரும்பி வந்தார். ரதனதேரர், பாடலி சம்பிக ரணவக ஆகியோர் ஐ.தே.முன்னணியில் போட்டியிட்டனர். கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன ஐ.தே. முன்னணியூடாக பாராளுமன்றம் சென்றார். இவர்களில் எவரும் முன் நிற்பது ஐ.தே.க அல்லது ஹெலஉருமயவுக்காக அல்ல. நல்லாட்சி அரசாங்கத்திற்காகவே இவர்கள் முன்னிற்கிறார்கள். மைத்திரியின் மேடையை தீயிட்டுக் கொளுத்திய முத்துஹெட்டிகமவுக்கு நல்லாட்சியில் இணைய முடியுமாகவிருந்தது. சமனலி உட்பட்ட கலைஞர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டவருக்கு நல்லாட்சியில் இணைய முடியும். ஜோன் செனவிரத்ன அமைச்சர் பதவி வகிக்கிறார். எனினும் இவர்கள் இன்னும் சுவாசிப்பது திருடினாலும் பரவாயில்லையெனக் கூறுகின்ற மஹிந்த சிந்தனைக்கேற்பவாகும். ஜோன் செனவிரத்ன, கோதாபய ராஜபக்ஷ ஸ்ரீல.சு.கவின் தலைவராக வேண்டுமெனக் கூறுகிறார். இது மடியில் இருந்து கொண்டு மைத்திரியை கிண்டலடிப்பதற்கு ஒப்பானதாகும். ஸ்ரீல.சு.கவுக்கு தலைவரொருவர் அவசியமென்று ஜோன் கூறுகிறார். இன்னும் யாரோ தயான் ஜயதிலவைப் பயன்படுத்தி ரணிலையும் மங்களவையையும் தாக்குகிறார்கள். அர்ஜுன் மகேந்திரன் இல்லாமல் முடியாதெனக் கூறும் பொருளாதார வல்லுனர்களும் இலங்கையில் இருக்கிறார்கள். கேதாக்கள், மகேந்திரன்கள், தயான்ஜயதிலகாக்கள் நாளை இறந்துவிட்டால் இலங்கை அழிவடையுமா? நல்லாட்சி சதுரங்க பரப்பு பூராகவும் தவறான சதுரங்க கட்டைகள். இவை அனைத்துக்கும் மனிதர்களை இணைத்துக் கொண்டதன் பிரதிபலிப்பே இது. யாழ்ப்பாணம் அல்பிரட்துரையப்பா விளையாட்டரங்கில் வெளிப்பட்ட இந்தியா - இலங்கை மதில் பண்டார நாயக்க யுகத்தை நினைவூட்டுகிறது. இதனை எந்த ஊடகத்திலும் மைத்திரிக்கு நன்மை பயக்கும் விதத்தில் கணிப்பீடு செய்யவில்லை. இவை அனைத்தும் கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடிய நிலைமைகளாகும். ஜனவரி 09 தேர்தல் பெறுபேற்றினால் மஹிந்த சென்ற போதிலும் மஹிந்தவின் முறையும் ஆட்களும் வெளியேற்றப்படவில்லை.

நல்லாட்சிக்கு அரசாங்கத்தின் பலம் கிடைக்கப்பெறவில்லை. அவரது, இவரது மிரட்டல்களுக்கு, அச்சுறுத்தல்களுக்கு அச்சமடைவதென்பது அரசாங்கமொன்று இல்லாத நிலையாகும்.

நோக்கத்தை வெற்றி கொள்வதற்கு மக்கள் வழங்கிய ஆணையை, அதிகாரத்தை உறுதி செய்துகொள்ள வேண்டும். ஜனவரியில் மைத்திரிபால சிறிசேனவுக்கு மக்கள் வழங்கிய அதிகாரத்தை அவர் இன்னும் உறுதிப்படுத்திக் கொண்டதாகத் தெரியவில்லை. ரோமுக்குச் சென்றவர் ரோம் நாட்டவராகச் செயற்பட வேண்டும். ஜோன் செனவிரத்னாக்களும் திலான் பெரேராக்களும் நல்லாட்சி அரசாங்கத்தின் ஆணி நட்டுகளாக இன்னும் சூழன்று கொண்டிருப்பது ராஜபக்ஷ முறைப்படியாகும். கோதாவைக் கொண்டு வருவதற்கும் ஸ்ரீல.சு.க அரசாங்கமொன்றை உருவாக்குவதற்கும் இவர்கள் முயற்சிக்கிறார்கள். தவறு இருப்பது இங்காகும். நல்லாட்சி அரசாங்கத்தின் கடந்த ஒன்றரைவருட அனுபவம் வெட்கப்பட வேண்டிய கதையொன்றாகும். நல்லாட்சி சதுரங்க கட்டைகளில் அதிகமானவை மோசமான நபர்களும், வெகுளிகளுமாவர். கட்டைகளை மாற்றிக் கொள்ள வேண்டிய காலமும் கடந்து விட்டுள்ளது. ஆட்சிவாளைக் கூர்மையாக்கிக் கொள்வதற்காக கல்லில் உராய்ந்தது அதிகம். தற்போது அது தேய்வடையத் தொடங்கியுள்ளது.

## துருக்கி - இஸ்ரேல் பிளவுக்கு முற்றுப்புள்ளி



இஸ்ரேலியக் கடற்படை, ஆறு வருடங்களுக்கு முன் பத்து துருக்கிய ஆர்வலர்களைக் கொன்றதையடுத்து, இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட பிளவை முடிவுக்குக் கொண்டு வரும் ஒப்பந்தமொன்று உறுதிப்படுத்தப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.


இரு நாடுகளுக்குமிடையே உள்ள உறவை சீராக்கும் ஒப்பந்தமொன்று எட்டியுள்ளதாக இரு நாட்டு அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2013ஆம் ஆண்டு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹூ மற்றும் துருக்கி ஜனாதிபதி ரஜப் தைய்ப் அர்துகான் இடையிலான சமாதான உரையாடலிலிருந்து இரு நாட்டின் உறவும் வலுப்படுத்தப் பட்டது.

சமீப காலமாக தீவிரப்படுத்தப்பட்ட பேச்சுக்கள், இரு நாட்டு தூதவர்களையும் திருப்பி அனுப்புவதற்கு வித்திட்டுள்ளது. இஸ்ரேலியக் கப்பற்படை, காசாவிலுள்ள பலஸ்தீனர்களுக்கு உதவிகள் வழங்க சென்று கொண்டிருந்த துருக்கிக் கப்பலொன்றின் மீது தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து இரு நாட்டிற்குமான உறவில் பிளவு ஏற்பட்டது.

# 'பலூஜா மீட்கப்பட்டுவிட்டது' ஈராக் பிரதமர் அபடி அறிவிப்பு

## 1800 ஐ.எஸ். தீவிரவாதிகள் பலி



ஐ.எஸ் போராளிகளிடமிருந்து பலூஜா நகரை மீட்டுவிட்டதாகவும், இது குறித்து ஈராக் மக்கள் மகிழ்ச்சியடையலாம் என்றும் ஈராக் பிரதமர் ஹைதர் அல் அபடி அறிவித்துள்ளார்.

பலூஜா நகரின் முக்கிய வைத்தியசாலையொன்றின் வெளியே, ஈராக் கொடியை அசைத்தவாரு தொலைக்காட்சி ஒன்றில் தோன்றினார் அபடி, ''ஐ.எஸ் அமைப்பினரின் பிடியிலிருந்த ஈராக்கின் மிகப்பெரிய நகரான மொசூலில், பாதுகாப்பு படையினர் ஈராக் கொடியை உயர்த்துவார்கள்'' என அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த ஈராக் இராணுவத்தின் லெப்டினன்ட் ஜெனரல் வஹாப் அல் சய்தி, கோலன் மாவட்டத்திலுள்ள முக்கிய நகரான பலூஜா தீவிரவாதிகளின் பிடியில் இருந்து முழுமையாக மீட்கப்பட்டுள்ளதாகவும், இந்நகரை மீட்பதற்காக கடந்த ஒருவார காலமாக நடைபெற்ற போரில் 1800 ஐ.எஸ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் அறிவித்துள்ளார்.

### சிங்கப்பூர் விமானத்தில் திடீர் தீ:

## விமானியின் சாதூரியத்தால் 241 உயிர்கள் காப்பு

241 பேருடன் சிங்கப்பூர் விமான நிலைய ஓடுபாதையில் அவசரமாக தரை இறங்கிய விமானத்தில் திடீரென தீப்பிடித்ததால் பயணிகள் பீதியடைந்து அலறியுள்ளனர்.

சிங்கப்பூரிலுள்ள சாங்கி விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான SQ368 விமானம் இத்தாலியின் மிலன் நகரை நோக்கி நேற்று அதிகாலை புறப்பட்டு சென்றது. நடுவானில் சுமார் இரண்டு மணிநேர பயணத்துக்கு பின்னர் அந்த விமானத்தில் இயந்திர எண்ணெய் தொடர்பான எச்சரிக்கை விளக்கு எரிய தொடங்கியது.

உடனடியாக விமானம் சிங்கப்பூருக்கு திரும்பி வந்தது. காலை 6.55 சாங்கி விமான நிலைய ஓடுபாதையில் தரையிறங்கியபோது விமானத்தின் வலதுப்புற என்ஜின் திடீரென தீப்பிடித்தது. இதைப்பார்த்து உள்ளே இருந்த பயணிகள் அனைவரும் பீதியால் அலறினர். எரிந்தபடியே ஓடுபாதையில் ஊர்ந்து சென்று விமானம் ஓரிடத்தில் நின்றதும் அதில் இருந்த அனைவரும் அவசர வழியாக கீழே இறக்கப்பட்டனர்.

அதற்குள் அங்கு விரைந்துவந்து, தயார் நிலையில் காத்திருந்த தீயணைப்பு வாகனங்கள், சில நிமிடங்களுக்குள் தீயை அணைத்து முடித்தன. விமானியின் முன்எச்சரிக்கை நடவடிக்கையால் நடுவானில் பலியாகவிருந்த 241 உயிர்கள் காப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்

## வெள்ளத்தில் மிதக்கும் வெர்ஜினியா 25 பேர் பலி 44 நகரங்களில் அவசர நிலை



அமெரிக்காவின் வெர்ஜினியா மாகாணத்தில் வரலாறு காணாத அடைமழையால் 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெர்ஜினியாவில் சில நாட்களாக தொடர்ந்தும் பெய்துவரும் கடுமழையால், ஆறுகள் மற்றும் நீர்நிலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

ஏராளமான வீடுகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளதுடன், பெரும்பாலான இடங்களில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கியுள்ளவர்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதோடு, மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. புயல் காரணமாக 44 நகரங்களில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் துப்பாக்கி சூடு நடத்தினால் தோட்டாக்களை எண்ணிக்கொண்டு இருக்கமாட்டோம்

### மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் எச்சரிக்கை

(திருச்சி சாஹுல் ஹமீட்)


பாகிஸ்தான் முதலில் துப்பாக்கி சூடு நடத்தினால், தோட்டாக்களை எண்ணிக் கொண்டு இருக்கமாட்டோம் என்று மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

காஷ்மீர் மாநிலம் பம்போர் பகுதியில் பஸ்ஸில் சென்ற பாதுகாப்பு படை வீரர்கள் மீது பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 8 பேர் பரிதாபமாக உயிரிழந்ததுடன், 21 பேர் படுகாயமடைந்தனர். பதிலடி தாக்குதலில் 2 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பாதுகாப்பு படையினர் மீது பயங்கரவாதிகள் இம் மாதத்தில் நடத்திய மிகப்பெரிய தாக்குதல் இதுவாகும்.

ஏற்கனவே கடந்த 3 ஆம் திகதி பிஜ்பெகாரா பகுதியில் பாதுகாப்பு படை வீரர்கள் மீது பயங்கரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 2 வீரர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத தாக்குதலுக்கு பாகிஸ்தானை சேர்ந்த லஷ்கர்-ஏ-தொய்பா தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. இந்நிலையில் பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக கருத்து தெரிவித்த இந்தியாவிற்கான பாகிஸ்தான் தூதர் அப்துல் பாசித் பேசுகையில்,

இது ரமழான் மாதம், இந்த இப்தார் நிகழ்ச்சியில் கவனம் செலுத்துவோம். ஜம்மு காஷ்மீர், இந்தியா-பாகிஸ்தான் இடையில் பிரச்சினையிலுள்ள விவகாரம். இது தீர்க்கப்பட வேண்டிய விவகாரம். இவ்விவகாரம் தொடர்பாக அமர்ந்து ஆலோசனை நடத்துவோம் என்று நாங்கள் நம்புகிறோம். இப்தாரை கொண்டாடுவோம், என்று தெரிவித்துள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



எல்லையில் தீவிரவாதிகளை ஊடுருவ செய்து பாகிஸ்தான் மறைமுகமாக தாக்குதலை நடத்திவருகிறது. பம்போர் பகுதியில் பாதுகாப்பு குறைபாடு ஏதேனும் இருக்கிறதா? என்பதை கண்டறிந்து சரிசெய்ய இரு வரை அப்பகுதிக்கு அனுப்ப ராஜ்நாத் சிங் மத்திய உள்துறை செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் பாகிஸ்தான் தன்னுடைய பயங்கரவாதிகளின் செயற்பாட்டை கண்காணிக்க தவறினால் இந்திய இராணுவப்படை தோட்டாக்களை எண்ணாது என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாங்கள் முதலில் துப்பாக்கி சூடு நடத்தமாட்டோம் என்பதை உறுதிசெய்கிறோம், ஆனால் பாகிஸ்தான் முதலில் துப்பாக்கி சூடு நடத்தினால், தோட்டாக்களை எண்ணிக்கொண்டு இருக்கமாட்டோம், உடனடியாக பதிலடி கொடுக்கப்படும், என்று ராஜ்நாத் சிங் எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்தியாவில் ஸ்திரத்தன்மையை குலைக்க பாகிஸ்தான் முயற்சிக்கிறது என்றும் ராஜ்நாத் சிங் குறிப்பிட்டுள்ளார்.



# வடக்கின் பொருளாதார மையம் மன்னாருக்கே பொருத்தம்

சத்தார் எம் ஜாவித்

யுத்தத்திற்குப் பின்னரான வடக்கின் அபிவிருத்திப் பணிகள் தற்போது பாரியளவில் இடம் பெற்று வருகின்றன. இந்த வகையில் இந்த அபிவிருத்திப் பணிகள் குறிப்பாக வடமாகாண மக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர். கடந்த மூன்று தசாப்த கால யுத்த வடுக்களில் தாண்டவமாடிய மக்களின் அவாவும் வடமாகாணம் மீண்டும் கட்டியெழுப்பப் பட வேண்டும் என்பதேயாகும்.

ஆனால் தற்போது அவதானிக்கும் போது பல அபிவிருத்திப் பணிகள் வடக்கில் குறிப்பாக யாழ் மாவட்டத்தினை மட்டும் அண்டியதாகவே மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இது ஏனைய மாவட்ட மக்கள் மத்தியில் பாரியதொரு கவலையை தோற்றுவித்துள்ளது. வடமாகாணத்தில் யாழ் மாவட்டம் மட்டுமல்லாது ஏனைய மாவட்டங்களும் நூற்றிற்கு நூறு வீதம் பாதிக்கப்பட்ட பகுதிகளாக யுத்த வடுக்களுடன் இன்று வரை காட்சியளிக்கின்றது.

எனினும் அரசின் அபிவிருத்திப் பணிகள் முழு மாகாணத்தினையும் பாதிக்காத வகையில் இடம் பெற வேண்டும் என்பதே வடமாகாண மக்களின் எதிர் பார்ப்பாகும். இந்த வகையில் அண்மையில் யாழ் மாவட்டத்தில் பாரிய நிதிச் செலவில் யாழ் துரையப்பா விளையாட்டரங்கு திறந்து வைக்கப்பட்டது. இதேபோல் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் அப்பகுதியைச் சூழவே இடம் பெற்று வருகின்றதை காணக் கூடியதாகவுள்ளது. இந்த விடயம் வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.

இந்த வகையில் தற்போது பூதாகாரமான விடயமாக வடக்கின் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கும் விடயம் காணப்படுகின்றது. குறிப்பாக வடமாகாண முதலமைச்சரும் அவரைச் சார்ந்த ஒருசில தமிழ் அரசியல் வாதிகளும் இந்த பொருளாதார மைதயத்தினை தத்தமது பகுதிகளுக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதிகளுக்கு கொண்டு செல்லும் முயற்சியை மேற்கொண்டு வரும் விடயங்கள் இடம் பெற்று வருகின்றன. இதற்காக அவர்களுக்கிடையில் அரசியல் சண்டைகளும் இடம் பெற்ற வருகின்றதைக் காணக் கூடியதாகவுள்ளது.

கடந்தகால யுத்தத்தால் கடுமையாக பாதிக்கப்பட ஒரு மாவட்டமாக மன்னார் மாவட்டம் காணப்படுகின்றது. இங்கு தமிழ் முஸ்லிம் மக்கள் அதிகமாக காணப்படுகின்றனர். இருந்தாலும் அரசின் தற்போதைய அபிவிருத்திப் பணிகள் எட்டாக் கனியாக உள்ள மாவட்டமாக இது காணப்படுகின்றது. இந்த நிலையில் அரசினால் வடக்கில் அமைய இருக்கும் பொருளாதார மையத் தினை மன்னா




ரில் அமைத்தால் அது நல்லதாக அமையும். காரணம் ஓமந்தையிலோ அல்லது தாண்டிக் குளத்திலோ அமையும்போது அது முஸ்லிம் மக்களுக்கும் பயனுள்ளதாக அமையாது. அத்துடன் இந்த மையம் மன்னாரில் ஏற்படுத்தப்படுமானால் எதிர் காலத்தில் சகல இன மக்களுக்கும் அது பயனுள்ளதாக அமையும்.

பொருளாதார மத்திய நிலையம் மன்னாரில் ஒரு பகுதியில் அமையுமானால் அந்த மையத்தின் மூலம் எதிர் காலத்தில் இந்தியாவிற்கான வர்த்தகத் தொடர்புகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். அதன் மூலம் அதிகளவான அந்நியச் செயலாவணிகளை ஈட்ட முடியும் என்பதுடன் இந்தியாவின் உற்பத்திப் பொருட்களை இலங்கை மக்கள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்புக்கள் ஏற்படலாம்.

இந்தியாவிற்கான கடற் போக்கு வரத்திற்கான இடமாக மன்னாரில் தலை மன்னார் இறங்கு துறை இருக்கின்றதுடன் போக்குவரத்துத் தூரமும் குறுகியதாக காணப்படுவதுடன் விரைவாக போக்குவரத்திற்கும் அது சாதகமானதாக காணப்படுகின்றது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த மார்க்கம் கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தால் இடை நிறுத்தப்பட்டு இன்று வரை அது செயலிழந்து கிடக்கின்றது. இந்த வகையில் வடக்கின் பொருளாதார வர்த்தக மையம் மன்னாரில் இடம் பெறுமானால் அதன் மூலம் இலங்கை இந்தியாவிற்கான கடல் மார்க்கத் தொடர்பு மீண்டும் ஏற்படுவதற்கும் வர்த்தகத் தொடர்புகள் மேம்படுவதற்கும் சிறந்தொரு வழியாக அமையலாம்.

இதன் மூலம் பல்லாயிரக் கணக்கானவர்கள் தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்வதுடன் பல ஆயிரக் கணக்கான குடும்பங்கள் தமது வாழ்வாதாரங்களை மேம்படுத்தவும், சுய தொழில் துறைகளை மேம்படுத்தவும் வாய்ப்பாக அமையலாம். இந்த வகையில் பொருளாதார வர்த்தக மையம் மன்னாரில் அமைக்கப்படுவது சிறந்ததாக அமையும் என வர்த்தக சமூகத்தினர் தெரிவிக்கின்றனர்.

வடக்கின் பொருளாதார மையம் அமைக்கும் விடயத்தில் தற்போதைய இழுபறி நிலைமைகள், ஒரு பக்க கொள்கைகள், சுய நலப் போக்குகள், அரசியல் சூழ்ச்சிகள் என்பன வற்றை நிறுத்தி நாட்டிற்கு அதிக பயன் தரும் மூலங்களைக் கண்டறிந்து உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கும் எமது பொருளாதாரக் கொள்கைகளையும் விஸ்தரிக்கும் வகையில் சிந்தித்து செயற்பட வேண்டுமே தவிர அரசியல் சண்டைகளையும், ஒருவரை ஒருவர் குற்றஞ் சுமத்தி தாம் தான் ஜாம்பவான்களாக ஆகும் நிலைமைகளை கைவிட்டு விட்டு பூலோக அடிப்படையில் மன்னாரில் பொருளாதார வர்த்தக மையத்தை அமைத்து வெளிநாட்டுத் தொடர்புகளை மேம்படுத்த முயல்வதே தற்போதைய சூழ் நிலையில் ஏற்றதான விடயங்களாகும்.

சுய நலன்களுக்கு அப்பால் தூர நோக்குடன் சிந்தித்து அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் அரசியல் பழி வாங்கல்களை மனதில் வைத்தக் கொண்டு ஒருவரை ஒருவர் விமர்சிப்பதை விட்டு விட்டு அழிவில் மூழ்கிய பகுதிகளை சரியான முறையில் இனங் கண்டு அந்த இடங்களை முன்னேற்றுவதில் அரசியல் தலைமைகள் செயற்பட வேண்டும் என்பதே அனைவரதும் எதிர் பார்ப்பாகும்.

வடக்கின் பொருளாதார, மையமானது இட அமைவு, கால நில மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தலைமன்னார் இறங்கு துறை என்பன வற்றை கவனத்திற் கொண்டு மன்னாரை மையமாகக் கொண்டு வடக்கின் பொருளாதார மையம் அமைவதே இலங்கை இந்திய பொருளாதார தொடர்புகளுக்கு சிறந்ததாகும்.

எனவே அரசாங்கம் வடக்கின் பொருளாதா மையத்தினை அமைக்கும் விடயத்தில் மன்னார் மாவட்டத்தினை கவனத்திற் கொண்டு மன்னாரில் அமைக்க நடவடிக்கைகள் எடுத்தால் அது தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு சிறந்த தீர்வாக அமையும்.



# முஸ்லிம்களை ஒடுக்குவதில் பர்மா, இஸ்ரேல் ஒற்றுமை

ஆங்கிலத்தில்: யுவோன் ரிட்லி
■ தமிழில்: அஷ்கர் தஸ்லீம்

மியன்மாரின் ஆன் சான் சூ கி உலகில் பிரபலமான பெண்களில் ஒரவர். சமாதானத்துக்கான நோபல் பரிசை பெற்ற அவர், அவரது மனித உரிமை பதிவுகள் காரணமாக ஆசியாவின் மண்டேலா என்றும் புகழப்படுகிறார். எவ்வாறாயினும், முன்னாள் பர்மாவின் ரோஹிங்கியா மக்களின் நிலை குறித்த அவரது தொடர்ந்தேச்சையான அக்கறையின்மையைப் பார்க்கும்போத, அவரது கருணை மற்றும் நேர்மையின் தரம் குறித்து நீங்கள் கேள்வி எழுப்ப வேண்டி வரும்.

நான் இவ்வாறு கூறுவது குறித்து நீங்கள் ஆச்சரியப்படலாம். இவ்வாறானா ஒருவர் குறித்து நான் எழுதுவேன் என்று நான் நினைத்தும்கூட பார்த்ததில்லை. பர்மிய ஜுண்டாவின் வீட்டுக் காவலில் பல வருடங்கள் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த இந்த ஜனநாயக தலைவரின் விடுதலைக்காக, உலகெங்கிலும் உள்ள இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் போன்றே, நானும் போராடினேன்.

சிறந்த எதிர்காலத்தை நோக்கி மியன்மாரை வழிநடத்துவதற்காக வேண்டி, அவர் இறுதியாக சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டபோது, என் கண்களில் கண்ணீர் கசிந்தது. ஆனாலும், மியன்மாரில் ரோஹிங்கியா மக்களின் அழுக்கடைந்த நிலை மற்றும் மனிதாபிமானமற்ற சூழ்நிலை குறித்த கவலைக்கிடமான நிலை பற்றிய அவரது மரண மௌனம் என்னை மொத்தமாக குழப்பிவிட்டுள்ளது.

பர்மா-மியன்மாரின் இராணுவ அரசு ரோஹிங்கியாக்களின் இருப்பை மறுத்தோடு, அவர்களை 'பங்களாதேஷியர்' என்றே அழைத்து வந்தது. ஆனாலும், ஆங் சான் சூ கியின் அரசியல் தலைமையின் கீழ், அரசு இன்னுமொரு படி மேலே சென்று 'ரோஹிங்கியா' என்ற சொல்லை பயன்படுத்துவதையே தடை செய்துள்ளது. எனவே, 1.1 மில்லியன் மக்கள் காணாமல் போனது போன்றுள்ளது. ஆங் சான் சூ கியும் பின்னணியில் பதுங்கியிருந்து செயற்படும் இராணுவ ஜெனரல்களும், அவசியமற்ற பிரஜைகள் மற்றும் இன சிறுபான்மையினரை கையாளுவது குறித்த இஸ்ரேலின் அனுகுமுறையை பின்பற்றுகிறார்களா என்றுகூட ஒருவர் கேள்வி எழுப்பலாம்.

இஸ்ரேலின் ஸ்தாபக பிரதமர் டேவிட் பென் குரியன் பர்மாவுடன் நெருங்கியை உறவை பேணினார் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. 1961 டிசம்பர் அரச விஜயத்தின்போது, அவருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. விமானத்தில் ஏறுவதற்கு சற்று முன்னர், ஊடகவியலாளர்களிடம் பேசிய அவர், 'நான் இன்றொரு புதிய நாட்டுக்கு பயணமாகிறேன். ஆனால், அது அந்நியமான ஒரு நாடல்ல. முழு மொத்த ஆசியாவிலுமே பர்மாவை விடவும் இஸ்ரேலுக்கு வேறு நெருங்கிய கூட்டாளிகள் இல்லை. இஸ்ரேலும் பர்மாவும் புராண வரலாற்றைக் கொண்ட இரு நாடுகள். இந்த நாடுகள் 1948 இல் தமது சுதந்திரத்தை புதிப்பித்துக் கொண்டன.' என்று கூறியிருந்தார்.

பென் குரியவின் கருத்துப் படி, 'இஸ்ரேலும் பர்மாவும் வெளியுறவு விடயங்களில் ஒரே கொள்கைகளைப் பின்பற்றுகின்ற இரு நாடுகளாகும். அத்தோடு, எந்தவொரு நாட்டினதும் நலன்களைப் பாதிக்காத வகையிலும், உள்நாட்டு ஆட்சி குறித்த வித்தியாசமான நிலைப்பாடுகள் இன்றியும் இரு பக்க உறவுகளையும் நட்பான உறவுகளை ஊக்குவிக்கின்ற இரு நாடுகளாகும். ஐ.நாவின் அடிப்படைகளின் மீதெழும் சர்வதேச ஒத்துழைப்புக்கு விசுவாசமாக இவை இருக்கும்.

அரச விஜயங்கள் பென் குரியனோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. சைமன் பெரஸ், மோசெ டயான், யிட்ஸக் பென் ஸ்வி மற்றும் கோல்டா மெய்ர் ஆகிய எல்லலொரும் ஏனைய அரசயில்வாதிகளுடன் பர்மாவுக்கு சென்றுள்ளனர். தற்போதைய பிரதமர் பெஞ்சமின் நெடன்யாஹு, பர்மிய-மியன்மார் தலைவர்களை டெல்அவிவில் விருந்தோம்பியுமுள்ளார்.

1948 முதல் 530 அரபு நகரங்களையும் கிராமங்களையும் தரைமட்டமாக்கி, மேற்குக் கரையிலும் காஸாவிலும் வாழும் பலஸ்தீனர்களின் நடமாடும் உரிமையை கட்டுப்படுத்தி, பலஸ்தீன கலாசாரத்தையும், உணவு முறையையும், வாழ்வொழுங்கையும் துடைத்தெறிந்து, பலஸ்தீன மக்களுக்க எதிராக இஸ்ரேலியர்கள் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதாக சிலர் கூறுகின்றனர். இந்த இனச் சுத்திகரிப்பு முறைமையை இஸ்ரேல் ஆங் சான் சூ கியிடமும் மியன்மாரிடமும் கொடுத்துவிட்டதாக என்று நான் ஆச்சரியப்படுகிறேன்.

ஊடகங்களுக்க விடுக்கப்படும் உத்தியோகபூர்வ விளக்கங்கள், ரோஹிங்கிய முஸ்லிம்களுக்கும், மியன்மார் பௌத்தர்களுக்கும் இடையில் மத ரீதியான பதட்டமொன்று உள்ளதாகவும். அதுதான் அங்குள்ள பிரச்சினை என்றும் அமைந்துள்ளன. ஆனால், அது உண்மையல்ல. அரச அனுசரணையில் நடக்கும் ரோஹிங்கிய மக்களுக்கு எதிரான துன்புறுத்தலம் ஒடுக்குமுறையும் தசாப்தங்களாகவே நடைபெற்று வருகின்றன. ரோஹிங்கியா மக்களுக்கு பிரஜா உரிமை மறுக்கப்பட்டுள்ளதோடு, சுகாதார சேவை, வைத்தியாசாலைகள், சுதந்திர நடமாட்டம் மற்றும் அடிப்படை மனித உரிமைகள் என்பனவும் மறுக்கப்பட்டுள்ளன. ரோஹிங்கியா மக்கள் மீது மத ரீதியான துன்புறுத்தல்கள் நிகழ்த்தப்படுவதோடு, அவர்களது நிலங்களும் பலவந்தமாக பறிமுதல் செய்யப்படுகின்றன. அத்தோடு, அவர்கள் வற்புறுத்தப்பட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதோடு, தன்னிச்சையான வரிவிதிப்புக்களுக்கும் உள்ளாகுகின்றனர். இன்னும், ரோஹிங்கியா மக்களின் வீடுகள் உடைக்கப்படுவதும், திருமணம், தொழில், கல்வி எனபவற்றுக்கும் ரோஹிங்கியா மக்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இஸ்ரேலும் பலஸ்தீனர்களுக்கு இதே மாதிரியான கொடுமைகளையும், அரச ஒடுக்குமுறைகளையுமே மேற்கொண்டது. ரோஹிங்கியாக்களும், பலஸ்தீனர்களின் நிலையே அனுபவித்து வருகின்றனர்.

கடந்த வருடம் ஆயிரக்கணக்கான ரோஹிங்கியா மக்கள், ஆட்கடத்தல் காரர்களாகல் நடுக்கடலில் தத்தளிக்க விடப்பட்டபோது, ஆசியா மிகப் பெரும் அகதிகள் பிரச்சினையை எதிர்கொண்டது.

ரோஹிங்கியா மக்களை சிறிய ரக படகுகளில் ஏற்றி வந்த ஆட்கடத்தல்காரர்கள் அவர்களை நடுக்கடலில் தத்தளிக்க விட்டுச் சென்றிருந்தனர். உள்நாட்டு மீனவர்கள் வழங்கிய கொஞ்சம் உணவும் அவர்களுக்கு கிடைத்திருக்காவிடின், பசியால் வாடிய அவர்களில் மரணங்களின் எண்ணிக்கை பெருமளவு உயர்ந்திருக்கும்.



சர்வதேச ரீதியாக எழுந்த குரலுக்குப் பின்னர், கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த ரோஹிங்கியா மக்களுக்கு அடைக்கலம் வழங்க அயல் நாடுகள் உடன்பட்டன. இருப்பினும், தாய்லாந்து, மலேசியா, இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் உள்ள மிகவும் மோசமான அகதி முகாம்களில் அவர்கள் தங்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். 150,000 அளவிலானோர் மிகவும் செறிவான முகாம்களையும் விட ஓரளவு சிறந்த நிலையில் வாழ்கின்றனர். அத்தோடு, பெரிய மனித புதைகுழிகள் கடந்த வருடம் கண்டுபிடிக்கப்பட்டன.

1962 க்குப் பின்னர் மியன்மாரில் தெரிவு செய்யப்பட்ட முதலாவத ஜனநாயக அரசு என்ற பெயரிலான அரசு, ரோஹிங்கியா மக்களின் நிலை குறித்து மௌனம் காத்து வருகின்றது. சமீபத்தில் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி, ரோஹிங்கியா மக்கள் குறித்து வினவியபோது, சூ கியின் சற்று கோபமடைந்துள்ளார். அத்தோடு, நுண்மையான விடயங்களில் எச்சரிக்கையாக இருக்குமாறு ஜோன் கெரிக்கு சொல்லப்பட்டள்ளது. தலைலாமவும்கூட, பல்வேறு சந்தர்ப்பங்களில் பகிரங்கமாகவும், தனிப்பட்ட முறையிலும், ஒடுக்குமுறைக்கு எதிராக நிற்குமாறு ஆங் சான் சூ கியிடம் வேண்டியுள்ளார். இருப்பினும், அவரது கோரிக்கைகளும் புறந்தள்ளப்பட்டுள்ளன.

ஸ்டேட் கவுன்ஸலரும் வெளியுறவு அமைச்சருமான ஆங் சான் சூ கி இஸ்ரேலியர்களிடமிருந்து தான் இனச் சுத்திகரிப்ப பாடங்களை கற்றிருப்பாராயின், அவர் நன்றாகவே கற்றிருப்பார். ராகினே மாநிலத்திலுள்ள முஸ்லிம்களை குறிப்பிடும்போது 'ரோஹிங்கியா' என்ற பதத்தை தனது அரசு பயன்படுத்தாது என்று ஆங் சான் சூ கி பிரகடனம் செய்துள்ளார். இது முன்னாள் இஸ்ரேலிய பிரதமர் கோல்டா மெய்ர், 'பலஸ்தீனர்கள் என்று எதுவுமில்லை' என்று ஒரு தடவை பிரகடனப்படுத்தியிருந்த தன் எதிரொலிதான்.

மியான்மாருக்கான ஐ.நாவின் விசேட அதிகாரி யன்கி லீயின் விஜயத்தின்போது, ஆங் சான் சூ கி 'ரோஹிங்கியா' அல்லது 'பங்காளி' என்ற பதங்களை இனிப் பயன்படுத்த மாட்டார் என்று வெளியுறவு அமைச்சின் பிரதி பணிப்பாளர் அயே அயே சூ தெரிவித்திருந்தார்.






# நுனி முடி பிளவா?

நுனி முடியில் பிளவு ஏற்பட்டால் மாதத்திற்கு ஒரு முறை நுனி முடியை வெட்டிவிடுங்கள். ஈரமான முடியை சீப்பால் வாராதீர்கள். தலைக்கு எண்ணெய் தடவும் போது நுனிமுடிக்கும் எண்ணெய் தடவுங்கள். வாரத்திற்கு இருமுறையேனும் எண்ணெய் மசாஜ் செய்து 5 நிமிடங்கள் ஊற வைத்து கூந்தலை கழுவுவதனால் கூந்தல் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும்.

செம்பருத்திப் பூ மற்றும் மஞ்சள் கரிசலாங்கண்ணி இரண்டையும் தேங்காய் எண்ணெயில் போட்டு பாத்திரத்தின் வாயை மூடி 15 நாட்கள் வெயிலில் காயவைத்து எடுக்கவேண்டும், பின்னர் அதனை தலைக்கும் கூந்தலின் நுனி பகுதியிலும் நாள்தோறும் தடவி வர நுனி முடி பிளவு பிரச்சினை மறைந்து போகும்.



# ஈத் பண்டிகையும் இந்தோனேஷிய பெண்களும்

(உம்மு ஆமினா பிலால்)

உலகில் அதிக முஸ்லிம் சனத்தொகையைக் கொண்ட நாடு இந்தோனேஷியா. அங்கு 250 மில்லியன் முஸ்லிம்கள் வசிக்கின்றனர். நாட்டின் மொத்த சனத்தொகையில் 90வீதமானோர் முஸ்லிம்களாவர். இந்தோனேஷியாவில் முஸ்லிம்களின் பண்டிகைக் காலங்களில் விழாக்கோலம் கட்டுவதைக் காணலாம்.

முஸ்லிம்கள் சந்திர நாட்காட்டியையே அவர்களின் வருட கணிப்பிற்காக பயன்படுத்துகின்றனர். அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடும் இரு பண்டிகைகளான ரமழான் நோன்பை முடித்துவிட்டு ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளும், ஹஜ் கடமைகளை நிறைவேற்றிய பின்னர் ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாளும் ஆகும். இவ்விரு பண்டிகைகளையும் சந்திர நாட்காட்டியின் உதவியோடு ஆரம்பிக்கின்றனர்.

இந்தோனேஷியாவில் முஸ்லிம்கள் நோன்புப் பெருநாள் ஆரம்பிப்பதற்கும், நோன்பு முடிவடைவதற்கும் அறிகுறியாக மேளங்கள் கொட்ட ஆரம்பித்து விடுகின்றனர். அதேபோன்று அவர்கள் ஒளி மின் விளக்குகளையும், தீபங்களையும் ஏற்றி கொண்டாட ஆரம்பிப்பர்.

பெண்கள் விதவிதமான பட்டாடைகளையும் அபாயாக்களையும் அணிந்துகொண்டு பண்டிகையை கொண்டாடுவார்கள். இந்தோனேஷிய பெண்கள் பல்வேறுபட்ட இனிப்புப் பண்டங்களையும் இந்த ரமழான் பண்டிகைக்காக தயார் செய்கின்றனர். விஷேடமாக இந்தோனேஷிய பெண்கள் தென்னை ஓலையில் நெய்த சிறு கூடைகளில் இனிப்புப் பண்டங்களை இட்டு பெருநாள் தினத்தன்று காலையில் பரிமாறுகின்றனர்.

தென்னை ஓலையால் தயார் செய்த சிறு கூடைகளிலே விருந்தோம்பல் மற்றும் பரிசில்களையும் வழங்குகின்றனர். வழமையாக பெருநாள் தொழுகையைத் தொடர்ந்தே இந்த விருந்தோம்பல் ஆரம்பிக்கும். இந்தோனேஷிய பெண்களும் மைதானத்துக்கு அல்லது திறந்த வெளிக்குச் சென்று பெருநாள் தொழுகையில் ஈடுபடுவர். தொழுகை முடிவடைந்ததைத் தொடர்ந்து சிறிய உரையொன்றின் பின்னர் பெண்கள் ஒருவரையொருவர் கட்டித் தழுவி அன்பை பரிமாறிக் கொண்டு, பரிசிகளும் வழங்கிக்கொள்வார்கள். மாலைநேரங்களில் ஒளி விளக்கேற்றியும், வானவேடிக்கைகள், குடும்ப ஒன்றுகூடல்களிலும் தம் பெருநாளை களிக்கின்றனர்.



# அன்புடன் கண்மணி

பா.மலரம்பிகை

# கிளிக் கூண்டு



**ரமழான் பெருநாளை முன்னிட்டு வித்தியாசமான சிற்றுண்டியான கிளிக்கூண்டை செய்து பார்க்கலாம்**

## தேவையான பொருட்கள்:

- உருளைக்கிழங்கு - 6
- எலுமிச்சைச்சாறு - அரை தேக்கரண்டி
- பச்சை மிளகாய், இஞ்சி விழுது - ஒரு மேசைக்கரண்டி
- கடலைமாவு - 4 மேசைக்கரண்டி
- உப்பு - தேவையான அளவு
- பொடியாக நறுக்கிய கொத்தமல்லித்தழை - 2 மேசைக்கரண்டி
- எலும்பு நீக்கிய சிக்கன் - 200 கிராம்

## செய்முறை:

உருளைக்கிழங்கை வேக வைத்து தோல் நீக்கி, மசித்துக் கொள்ளவும். அதே போல, சிக்கனை வேக வைத்துக் கொள்ளவும்.

இனி, தேவையானவற்றில் கொடுத்துள்ள அனைத்து பொருட்களையும், ஒன்றாகச் சேர்த்துப் பிசைந்து வைக்கவும்.




## தேவையான பொருட்கள்:

- மா - கால் கப்
- சோள மா - கால் கப்
- உப்பு - தேவையான அளவு
- தண்ணீர் - தேவையான அளவு
- சேமியா - 200 கிராம்
- எண்ணெய் - தேவையான அளவு

## செய்முறை:

மா, சோளமா, உப்பு மற்றும் தண்ணீரைச் சேர்த்து பஜ்ஜி மா பதத்துக்கு கட்டி விழாமல் கரைத்துக் கொள்ளவும். பிசைந்த உருளைக்கிழங்கு கலவையை நீள்வட்ட வடிவில் உருண்டை பிடிக்கவும். இதை கரைத்து வைத்துள்ள மைதா மாக் கலவையில் முக்கி எடுத்து சேமியாவின் மேல் புரட்டி எடுக்கவும். இதைப் போல் எல்லா உருளைக்கிழங்கு கலவையையும் சேமியாவில் புரட்டி எடுத்து வைக்கவும். இனி பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் ஒரே நேரத்தில் மூன்று கிளிக் கூண்டுகளை எண்ணெயில் சேர்த்து மிதமான தீயில் பொன்னிறமாகப் பொறித்து எடுத்தால் கிளிக் கூண்டு ரெடி!!! இதனை தக்காளி சோஸுடன் சூடாகப் பரிமாறலாம்.



# கைவிரல் மூட்டுக்களில் கருமையா

கைவிரல் மூட்டுக்கள் கருப்பாக இருப்பதற்கு அதிகளவான சூரியகதிர்களே காரணம். இந்த கருமையைப் போக்க, 2 தேக்கரண்டி தேன், 1 தேக்கரண்டி எழுமிச்சைச் சாறு மற்றும் சீனி ஆகியவற்றை ஒன்றாக கலந்து கைவிரல் மூட்டுக்களில் தடவி 20 நிமிடம் மசாஜ் செய்து கழுவவேண்டும். இவ்வாறு நாள்தோறும் செய்து வர மூட்டுக்களில் உள்ள கருமைகள் வேகமாக மறையும்.

நகங்கள் வலிமை பெறவும் தேங்காய் எண்ணெய் அல்லது ஒலிவ் எண்ணெய் பயன்படுத்தி நித்திரைக்கு செல்லும் முன் நகங்களையும் கைகளையும் மசாஜ் செய்து வந்தால் நகங்கள் வலிமைப் பெறுவதோடு ஆரோக்கியமானதாகவும் இருக்கும். தினந்தோறும் செய்து வர நல்ல மாற்றம் ஏற்படும். இதனால் நகம் உடைதல், நகச் சுத்தி போன்றவைகளும் ஏற்படாது தடுக்கலாம். நகப்பூச்சி பாவிக்கும் போது கவனமாக கையாள்வது சிறந்தது.

**வாசகர்களாகிய நீங்களும் உங்களது சமையல் மற்றும் உடல் சார்ந்த அடிப்படை பிரச்சினைகள் குறித்த சந்தேகங் களை எமக்கு எழுதி அனுப்புவதோடு உங்களுடைய ஆக்கங்களையும் எமக்கு அனுப்பிவைக்கலாம். உங்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க நாங்கள் தயாராக உள்ளோம். அனுப்ப வேண்டிய முகவரி,**

**நவமணி அன்புடன் கண்மணி**
**# 156, ஹொஸ்பிடல் ரோட்,**
**களுபோவில, தெஹிவளை.**



# ஈத் பண்டிகைக்கு ஆயத்தமா?

### மருதாணியை வீட்டிலேயே தயாரிக்கலாம்

தேவையான பொருட்கள்
மருதாணி பொடி- 2 தேக்கரண்டி
எழுமிச்சைச்சாறு- ஒரு தேக்கரண்டி
யூக்கலிப்டஸ் எண்ணெய்- ஒரு தேக்கரண்டி

இந்த மூன்றையும் கலந்து மருதாணி பேஸ்ட் செய்து கொண்டால் வீட்டிலேயே தயாரிக்கப்படும் கோனில் மருதாணியை பெருநாள் தினத்திற்கு முந்திய தினம் மருதாணியை இடலாம்.

பச்சை இலைகளை அரைத்து நேரடியாக மருதாணி இட்டுக் கொள்ளவது மிகவும் நல்லது.

கோன் செய்யும் முறை

1. பொலித்தீன் பேப்பரை மிகவும் தடிப்பமாகவும் இல்லாமல், மிகவும் மெல்லியதாகவும் இல்லாமல் சற்று தடித்த பேப்பராக எடுத்து அதனை கோன் போல் சுருட்டி பசை டேப் கொண்டு ஒட்டி விடவும். செய்து வைத்திருக்கும் கோனில் மருதாணி கலவையை காற்றில்லாமல், இடைவெளியில்லாமல் நிரப்பி மேலே இருக்கும் பகுதியை நன்கு இறுக்கமாக பசை டேப் அல்லது ரப்பர் பேண்ட் கொண்டு கட்டிவிட வேண்டும்.

கைகள், கால்களில் மருதாணி இடும் போது முதலில் பேப்பர் அல்லது கைகளில் உங்களுக்கு தெரிந்த டிசைன்களை கோலம் போடுவது போல் போட்டு பயிற்சி பெற வேண்டும். ஆரம்பத்தில் கடினமாக தெரிந்தாலும் சில முயற்சிகளுக்கு பிறகு வெற்றி காணலாம்.

### சல்வார் எப்படி இருக்க வேண்டும்

ஆடைகளில் பல வகைகள் உண்டு. ஒவ்வொருவரும் தங்கள் உடல் எடை, உயரம் போன்றவற்றிற்கு தகுந்த ஆடைகளை தேர்ந் தெடுத்து, நாம் செல்லும் இடத்திற்கு ஏற்றவாறு அணிய வேண்டும்.

மாநிறம் கொண்ட பெண்கள் மெரூன், சிவப்பு மற்றும் நீலம் போன்ற நிறங்களைக் கொண்ட சல்வார் அணிவது நல்லது. சல்வார் கமீஸ் ரெடிமேட் வாங்குவதை விட, உங்கள் அளவிற்கேற்ப தைப்பது தான் சிறந்தது. ஆனால் தற்காலத்தில் நவீன கரமான சல்வார் வகைகள் விற்பனைக்கு உண்டு நமக்கு தேவைக்கு ஏற்றது போன்று அதனை பிரித்து தைய்த்து கொள்ளலாம்.

### சுடிதாரை எப்படி தெரிவு செய்வது?

குள்ளமாக இருப்பவர்கள் குட்டையான டாப் போடாதீர்கள். அது, உங்களை இன்னமும் குள்ளமாகக் காண்பிக்கும்.

முழங்கால் வரையிலான குர்தா போட்டுக் கொண்டால், உயரமாகத் தெரிவீர்கள்.

அதேபோல், நெடுங்கோடுகள் கொண்ட சுடிதார் உங்களை உயரமாகக் காட்டும். சிலருக்கு இடுப்பு கொஞ்சம் அகலமாக இருக்கும். அப்படியிருப்பவர்கள் இடுப்பிலிருந்து ஸ்லிப் கட் வருமாறு சுடிதார் தைத்துக் கொள்ளலாம்.





# இஸ்லாமும் பெண்களும்...

ஸக்கியா ஸித்தீக்

நபி(ஸல்) அவர்களின் பலதார மணத்தை எடுத்துக் காட்டி சிலர் இஸ்லாம் பெண்களுக்கு அநீதி இழைக்கிறது என்று மனம் போன போக்கில் சிலாகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நபி(ஸல்) அவர்களது ஒவ்வொரு திருமணத்தினதும் யதார்த்தத்தைப் புரிந்து கொள்பவர்கள் இதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்வார்கள். நபியவர்கள் தனது 25 ஆவது வயதில் தன்னிலும் 15 வருடங்கள் மூத்த, இதற்கு முன் இரண்டு கணவர்களைத் திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்று விதவையாகிய 40 வயது கதீஜா(ரலி) அவர்களை முதல் திருமணம் செய்து அவர்களோடு 25 வருடங்கள் வாழ்ந்தார்கள்.

கதீஜா(ரலி) அவர்களின் மரணத்திற்குப் பின் தனது வயதிற்கு வந்த குழந்தைகளைக் கவனிப்பதற்காக 50 வயது தாண்டிய சௌதா(ரலி) அவர்களை நபியவர்கள் மணந்தார்கள். அதற்கு 3 வருடங்களுக்குப் பின் அல்லாஹ்வின் கட்டளைப்படி அன்னை ஆயிஷா(ரலி) அவர்களை மணந்தார்கள். பின்னர் நபியின் 55-59 வரை மணந்த எல்லாப் பெண்களையும் தக்க காரணங்களுக்காகவே மணம் புரிந்தார்கள். பலதார மணத்தை சாடுபவர்கள், இஸ்லாம் வலியுறுத்தும் ஒரு தார மணத்தை வலியுறுத்தும் கருத்துக்களையும் சிந்திக்கவேண்டும்.

''அநாதைகளின் விடயத்தில் நீதியாக நடக்க முடியுமென தெரிந்தால் உங்களுக்கு விருப்பமான பெண்களை இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நன்நான்காகவோ மணமுடித்துக் கொள்ளுங்கள், நடுநிலையாக நடப்பது கடினமென எண்ணினால் ஒன்றையே போதுமாக்கிக் கொள்ளுங்கள்''(4;3) எனக் குறிப்பிடும் அல்குர்ஆன் நீதமாக நடக்க முடியாத விடத்து ஒன்றோடு உங்கள் திருமணத்தை நிறுத்திக்கொள்ளுங்கள் என்று தெளிவாகக் கூறுகிறது.

மேலும் மனைவியரிடையே நீதத்துடன் நடந்துகொள்ள நீங்கள் முயற்சித்தாலும் அது உங்களால் இயலாது. அதற்காக ஒரேடியாக ஒருபக்கம் நீங்கள் சாய்ந்துவிடவும் கூடாது. சீராகவும், இறைவனுக்குப் பயந்தும் நீங்கள் நடந்துகொண்டால் அல்லாஹ் மன்னிப்போனாகவும், கருணையுடையோனுமாக இருக்கின்றான்(4,129) என்ற குர்ஆன் வசனம்

''பலதாரமணம் என்பது ஒரு பொதுவிதியல்ல. அது ஒரு விதிவிலக்கான விடயமேயாகும்'' எனவே பலதார மணம் பெண்களுக்குச் செய்யும் அநீதி, கொடுமை என யாரும் வாதாட வேண்டிய அவசியமில்லை.

குர்ஆனோ, ஹதீஸோ பலதார மணத்தை வலியுறுத்தவுமில்லை. வேண்டாமென்று தடுக்கவுமில்லை.



# கர்ப்பிணிகள் உறங்கும் முறை

கர்ப்பிணிகள் உறங்கும் போது சில வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். அது தாய்க்கும், சேய்க்கும் பாதுகாப்பானது.

கர்ப்ப காலத்தில் பெண்கள் குறைந்த பட்சம் 8 மணி நேரம் உறங்கவேண்டும். இது கருவின் வளர்ச்சிக்கு அவசியமானது என மகப்பேறு மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

கர்ப்பிணிகள் எழுந்து உட்கார்ந்து பிறகு மெதுவாக படுக்க வேண்டும். ஒருக்களித்துப் படுப்பதே நல்ல படுக்கை முறை. மல்லாந்து படுக்கும்போது கருப்பை இரத்தக் குழாய்களை அழுத்துவதால் மூச்சுத்திணறல், இரத்த ஓட்டக்குறை போன்றவை உண்டாகலாம்.

இரவு நேரத்தில் எளிதில் உறக்கம் வராது. எனவே சிறிது தூரம் மெதுவாக நடந்துவிட்டு வந்து உறங்கலாம். அசதியில் உறக்கம் வரும். இரவு படுக்கைக்குச் செல்லும் முன்பாக வெது வெதுப்பான நீரில் குளித்து விட்டு உறங்கச் செல்வது மிகவும் நல்லது.

எந்த காரணம் கொண்டும் குப்புற படுத்து உறங்கக் கூடாது. ஏனெனில் அது கருப்பையை அழுத்துவதோடு குழந்தைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

உறங்கும் முன் தலைக்கு அருகில் கைப்பேசியை வைத்துக்கொண்டு உறங்குவதை தவிர்க்கவேண்டும். அதிலிருந்து வெளியாகும் கதிர்வீச்சு குழந்தைக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

தலையணையை வசதியான வகையில் வைத்து உறங்குவது நல்லது. கால்களுக்கும் வைத்து உறங்குவது கால் வீக்கம் வலி ஏற்படுவதை தவிர்க்கும். கடைகளில் கிடைக்கும் சிறிய அளவிலான கர்ப்பகால தலையணைகளை வாங்கி உபயோகிக்கலாம். இரவு நேரங்களில் அதிக இறுக்கமான ஆடைகளை அணிவதை தவிர்க்கவேண்டும். ஏனெனில் மார்பக வளர்ச்சி, இடுப்பு பகுதிகள் விரிவடையும். அப்பொழுது ஏற்படும் சிரமத்தை தவிர்க்கவே இறுக்கமான ஆடைகளை தவிர்க்க வேண்டும். பெரும்பாலான கர்ப்பிணிகள் நெஞ்செரிச்சல், அஜீரணக் கோளறுகளினால் சிரமப்படுவார்கள். இவர்கள் உண்ட உடன் உறங்கச் செல்லக்கூடாது.

படுக்கும் முன் வெது வெதுப்பாக பால் குடித்தால் உறக்கம் வரும். கர்ப்பிணிகள் குறிப்பாக மன அழுத்தத்தினால் பாதிக்கப்படாமல் நிம்மதியாக இருக்கவேண்டும் அப்பொழுதுதான் ஆழ்ந்த உறக்கம் வருவதோடு கரு வளர்ச்சியும் சீராக இருக்கும்.




# பெண்!

அன்பின் ஒரு தாய்
அழகில் ஒரு தேவதை
அறிவில் ஒரு மந்திரி
ஆதரவுகு ஒர் உறவு

வெறுப்பில் ஒரு நெருப்பு
வெற்றிக்கு ஒரு மாலை
தோல்விக்கு ஒரு பள்ளம்
கண்டிப்பில் ஒர் ஆசிரியர்

நட்பில் ஒரு நேர்மை
இருந்தாலும் பெண்
ஒரு புரியாத புதிர்



**பாத்திமா மரியம் முபாரக்**
**கஹட்டோவிட்ட**








# டெங்கு நோயை கட்டுப்படுத்த புகை விசிரும் பணிகள் ஆரம்பம்

கொழும்பு மாவட்டத்தில் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப் பட்டுள்ள பகுதிகளில் புகை விசிரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இந்த நடவடிக்கைகளுக்காக 60 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வு பிரிவின் தொற்று நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் டாக்டர் ஹசித்த திஸர தெரிவித்தார்.

இரண்டு நாட்களுக்கு அதிகமாக ஒருவருக்கு காய்ச்சல் நீடிக்குமாயின் உடனடியாக வைத்தியரை நாடுமாறும் அவர் ஆலோசனை வழங்கினார். வருடத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் 31 பேர் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இதனையடுத்து இந்த மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் அடுத்துவரும் 3 நாட்களுக்கு விசேட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வெள்ளத்தின் பின்னர் குப்பைகளினால் நிரம்பிய வடிகான்களை துப்பரவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இலங்கைக்கான ஏற்றுமதி சேவைகளை எவ்வாறு அதிகரிப்பது? என்ற கருப்பொருளில் செயலமர்வு ஒன்று கைத்தொழில் வர்த்தக அமைச்சின் கீழான வணிகத் திணைக் களத்தினால் நேற்று (27) பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு செயலமர்வை ஆரம்பித்து வைத்தார். இந்த செயலமர்வுக்கான ஒத்துழைப்பை பண்டாரநாயக்கா சர்வதேச கற்கைகள் மையம் வழங்கியுள்ளது.

# பதுளை ஒக்ஸ்போர்டின் இப்தார் நிகழ்வு

பதுளை ஒக்ஸ்போர்ட் சர்வதேசப் பாடசாலையின் இன நல்லிணக்க ஒருமைப்பாட்டுக்கான இப்தார் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (26) பதுளை ஒனெக்ஸ் விடுதியில் சிறப்பாக நடைபெற்றது.இந் நிகழ்வினை ஒக்ஸ்போர்ட் முஸ்லிம் மஜ்லிஸ் நான்கு இன மத மாணவர்தம் பெற்றோர் சகிதம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

ஒக்ஸ்போர்ட் முகாமைத்துவப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் ரிஸான் ஸெய்ன் (நளீமி) மற்றும் ஒக்ஸ்போர்ட் அதிபர் நிமலசிறி இணைத்தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பண்டாரவளை பெரிய ஜும்ஆப்பள்ளிவாசல் பேஷ் இமாம் அல்ஹாபிஸ் ரஷாத் ஸமான் (ரஹ்மானி) மௌலவி விசேட பிரசங்கத்தை சிங்களத்தில் நிகழத்தினார்.

நிகழ்வில் விசேட அதிதிகளாக சாஸ்தாபதி பண்டித பஞ்சாகித தேரர் (தர்ம தூத கல்லூரி) ப/ரிதிபான பேச்சியம்மன் ஆலய கோபி சர்மா குருக்கள் கலந்துசிறப்பித்தனர். பதுளைக்கிளை உலமாசபைதலைவர் யூசுப் ஸஹ்ஸ் மௌலவி உள்ளிட்ட உலமாக்கள் முன்னாள் சரஸ்வதி அதிபர் யோகநாதன், மாநாகர உறுப்பினர்களான மன்சூர் நஸீர் பதுளை வை.எம்.எம்.ஏ தலைவர் இர்ஸான் ஹமீட் பள்ளி நிர்வாகிகள் சமய சமூக வர்த்தகர் பலர் பங்கேற்றனர். அதிபர் நிமலசிறி ஆசிரியர் மொஹிடீன் நன்றியுரை வழங்கினார்.

# பௌத்த பேரினவாதிகளுடன் மட்டுமல்லாது மற்றவர்களுடனும் போராடவேண்டியுள்ளது

## இப்தார் நிகழ்வில் பிரதி அமைச்சர் அமீர் அலி





(எம்.வை.அமீர்)

அகதியாக வந்து தற்போது அதிதியாக நமது மனங்களில் வீற்றிருக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் றிஷாத் பதியுதீன் தற்போது பௌத்த பேரினவாதிகளுடன் மட்டுமல்லாது மற்றவர்களுடனும் போராடவேண்டியுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளரும் கிராமிய பொருளாதார பிரதி அமைச்சருமான எம்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

ஸ்மார்ட் ஒப் ஸ்ரீலங்கா அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்தார் நிகழ்வு அவ்அமைப்பின் தலைவர் கே.ஆர்.றிஸ்கான் முகம்மட் தலைமையில் மாளிகைக்காடு பிஸ்மில்லா வரவேற்பு மண்டபத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றியபோதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புலிகளால் துரத்தப்பட்டபோது எவ்வாறு பழைய ரீ சேட்டுடனும் சாரனுடனும் மன்னாரில் இருந்து புத்தளத்துக்கு வந்தாரோ அந்த நிலவரத்திலே இருக்கிற மக்களின் கல்வி விடயத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக தேசியத்திலே பௌத்த பேரினவாதிகளுடன் மட்டுமல்லாது மற்றவர்களுடனும் போராடவேண்டிய நிலையில் அமைச்சர் றிஷாத் பதியுதீன் இருப்பதாக தெரிவித்தார்.

கடந்த ஆட்சியில் காணப்பட்ட பேரினவாதிகளின் எச்ச சொச்சங்கள் இப்போதும் அதிகார மட்டத்திலும் பாராளுமன்றத்திலும் இருப்பதாகவும் தெரிவித்தார்.

சிறுபான்மையினருக்கு அநீதியிழைத்த ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து செயற்படும் அரசாங்கத்துக்குள் தற்போது இருப்பதாகவும் எனவே மிகுந்த அவதானத்துடன் தங்களது காரியங்களை ரஊப் ஹக்கீம் உட்பட சிறுபான்மை தலைமைகள் ஆற்றவேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே தற்போது உருவாகியுள்ள புதிய அரசியல் கலாசாரம் எவ்வளவு தூரத்துக்கு நன்மை பயக்கும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டியுள்ளதாகவும், எங்களுக்கு கிடைத்துள்ள இடைக்கால நன்மை என்றால் அது, மகிந்த ராஜபக்ச இல்லை என்பது மட்டும் தான் பொதுபல சேனாக்கள் மற்றைய சேனாக்கள் அழிந்துவிட்டார்கள் என்று பொருள் அல்ல என்றும் தெரிவித்தார்.

கடந்த தேர்தல் காலங்களில் தன்னால் முன்வைக்கப்பட்ட கருத்து ஒன்று, அரசியல் தலைவர்கள் தீர்மானிப்பதற்கு முன்பாக மக்கள் எடுத்துள்ள முடிவு எதிர்காலத்திலே அது பிழையாகிப்போய்விடுமா? என்கிற விடயம் எதிர்கால அரசியலிலே தான்

சொல்லவேண்டிய ஒரு விடயம் என்று கூறியிருந்ததாகவும் எனவே அந்தகாலம் வந்துவிட்டதே என்ற சந்தேகம் தன்னிடம் இருப்பதாகவும் இது ஒரு சவால் மிக்க காலம் என்றும் தெரிவித்தார்.

# கால்நடை களவுகளைத் தடுக்க பொலிஸ்,பண்ணையாளர் விசேட திட்டம்

(ஏ.ஜி.ஏ.கபூர், அக்கரைப்பற்று)

அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, தமண, சம்மாந்துறைப் பொலிஸ் பிரதேசங்களில் அண்மைக் காலமாக இடம் பெற்று வரும் கால்நடைகள் களவு போதலைத் தடுத்து கால்நடை உற்பத்திப் பண்ணையாளர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பற்றி ஆராயும் கூட்டம் கடந்த (24) ஆம் திகதி அக்கரைப்பற்று பட்டியடிப்பிட்டியில் அமைந்துள்ள மன்பஉல் கைறாத் அரபிக் கல்லூரி மண்டபத்தில் அக்கரைப்பற்று கால்நடை உற்பத்திப் பண்ணையாளர் அபிவிருத்தி சங்கத் தலைவரும் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.உமர் லெவ்வை தலைமையில் இடம் பெற்றது.

அக்கரைப்பற்று கால்நடை உற்பத்திப் பண்ணையாளர் அபிவிருத்தி சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, தமண, சம்மாந்துறைப் பொலிஸ் பிரதேசங்களில் அண்மைக் காலமாக இடம் பெற்று வரும் கால்நடைகள் களவு போதலைத் தடுத்து கால்நடை உற்பத்திப் பண்ணையாளர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பற்றி டாக்டர் எம்.ஐ.றிப்கான், அக்கரைப்பற்று, தமண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரிகளான எம்.இப்றாஹிம், ஏ.ஜெயசிங்க, சங்கத்தின் உப தலைவரும் விதை நெல் அத்தாட்சிப்படுத்தும் நிலைய பொறுப்பதிகாரியுமான விவசாயப் போதனாசிரியர் எம்.நஸீர், கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உட்பட சங்க நிருவாக சபை உறுப்பினர்கள், கால்நடை உற்பத்திப் பண்ணையாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது கால்நடை உற்பத்திப் பண்ணையாளர் அபிவிருத்தி சங்கத் தலைவர் ஏ.உமர் லெவ்வை அக்கரைப்பற்று கால்நடை உற்பத்திப் பண்ணையாளர் அபிவிருத்தி சங்கம் எதிர் கொள்ளும் கால்நடை களவு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் பற்றி விளக்கினார். தொடர்ந்து அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேச கால்நடை வைத்தியர்களான டாக்டர் ஏ.எச்.எம்.ஹனீஃப், [illegible] எம்.ஐ.றிப்கான், தமன குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் எம.ஜெயசிங்க ஆகியோர் கால்நடை உற்பத்தி சம்பந்தமான அரச நடைமுறைகள், அரசினால் வழங்கப்படக் கூடிய வசதிகள், உதவிகள் பற்றி விளக்கினார்கள்.

கால்நடைகள் களவு போவதை பொலிஸார் பண்ணையாளர்களின் உதவியுடன் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்வதெனவும், கால்நடைகளை மேய்ச்சலுக்காகவும், விற்பனையின் பின்னர் வேறு இடத்திற்குக் கொண்டு செல்கின்றபோது ஏற்படுகின்ற பிரச்சினைகளை தவிர்க்க பொலிஸ், கால்நடை வைத்தியர்கள் மற்றும் பண்ணையாளர்கள் இணைந்து எதிர் காலத்தில் செய்றபடுவது என்றும், கால்நடைகள் அனைத்தையும் பதிவு செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

# அக்கரைப்பற்று, கல்முனை வலயங்களில் நிலுவை வழங்காததால் ஆசிரியர்கள் அவதி

(திகாமடுல்ல நிருபர்)

அக்கரைப்பற்று, கல்முனை வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள்,அதிபர்களின் சம்பள நிலுவை பல மாதங்களாகியும் இன்னும் வழங்கப்படாமைகுறித்து ஆசிரியர்கள் அதிபர்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

புதிய பிரமாணக்குறிப்பிற்கு அமைய உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட ஆசிரியர்கள்,அதிபர்களுக்கான சம்பள நிலுவை இன்னும் வழங்கப் பட்டுநிறைவுறாமையினால் அக்கரைப்பற்று, கல்முனை வலயங்களில்கடமையாற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள் கடும் அசௌகரியங்களைஎதிர்கொண்டுவருகின்றனர். கடந்த வருடம் 2008ஆம் ஆண்டுமுதல் புதியஆசிரியர் பிரமாணக்குறிப்பிற்கு அமைய உள்ளீர்ப்புச் செய்யப்பட்டவர்களுக்கு2011.01.01 முதல் நிலுவை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தும்சிலரைத்தவிர ஏனையவர்களுக்கு இன்னும் நிலுவைச் சம்பளம்வழங்கப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வருகிறது.

கிழக்கு மாகாண கல்விப்பணிமனையில் போதுமான நிதி கையிருப்பில்இருந்தும் வலய கல்விப் பணிமனைகளில் இருந்து கணக்கிடப்பட்ட தரவுகள்கிடைக்காமையினால் காலதாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. கிடைக்கப்பெற்ற நிதி நிறைவடைந்துள்ளமையால் மேலும் நிதி கிடைத்தால்மாத்திரமே மிகுதி சம்பள நிலுவையை வழங்கமுடியும் என வலயக் கல்விப்பணிமனை அதிகாரிகளால் கூறப்பட்டுவருகிறது. இக் கூற்றினால் ஆசிரியர்களும், அதிபர்களும் ஏமாற்றப்பட்டு வருகின்றனர்.

எனவே கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தலையிட்டு ஆசிரியர்கள்அதிபர்களுடைய சம்பள நிலுவைகளை உடனடியாக வழங்க நடவடிக்கைஎடுக்குமாறும், குறிப்பாக முஸ்லிம் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு நோன்புப்பெருநாளைக்கு முன்னர் சம்பள நிலுவைகளை வழங்குமாறும் நிலுவை கிடைக்காத ஆசிரியர்கள், அதிபர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# வெளிநாட்டு கைக்குண்டுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

(கலாவெவ நிருபர்)

கெகிராவ பொலிஸ் பிரிவில் காகம பிரதேசத்தில் வீடு ஒன்றில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் விற்பனை செய்வதாக கிடைத்த தகவல் ஒன்றுக்காக வீட்டை சோதனையிட்ட போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றுடன் பணிநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீட்டை பரிசோதனை செய்ய பொலிஸாருக்கு கடமையை செய்யவிடாது சந்தேக நபர் தாக்கிவிட்டு தப்பியோட முயற்சித்தபோதே அவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரின் தாக்குதலுக்குள்ளான கெகிராவ பொலிஸ் நிலைய உபபொலிஸ் பரிசோதகர் ஒருவர் சிறிய காயங்களுடன் கெகிராவ வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சந்தேக நபர் 2004 ஆம் ஆண்டில் வவுனியா பொலிஸில் கடமை புரியும் போது பதவியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டார் சந்தேக நபரை கெகிராவ மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் கெகிராவ பொலிசார் தெரிவித்தனர்.







அம்பாரை மாவட்ட ஊடகவியளாளர் சம்மேளனத்தின் வருடாந்த இப்தார் வைபவம் சம்மேளனத்தின் தலைவர் கலாபூஷணம் மீரா இஸ்ஸதீன் தலைமையில் மாளிகைக்காடு பிஸ்மில்லாஹ் ஹோட்டலில் இடம்பெற்றது இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட திருகோணமலை மாவட்ட நீதிபதி அல்ஹாபிஸ் என்.எம்.அப்துல்லாஹ் மற்றும் ஏ.யூ.கப்பார், மற்றும் மௌலவி கமால்தீன் ஆகியோர் மற்றும் சம்மேளனத்தின் அங்கத்தவர்களையும் படத்தில் காணலாம்.

(படம்- அக்கரைப்பற்று விசேட நிருபர்)

# வாகன விபத்தில் குடும்பஸ்தர் பலி

(கந்தளாய் எட்.முபாரக்)

திருகோணமலை 05ஆம் கட்டைப்பகுதியில், நேற்று அதிகாலை இடம் பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியைக் கடக்க முற்பட்ட வேளை, வாகனமொன்று மோதியதிலேயே அவர் உயிரிழந்துள்ளதாகவும் வாகனத்தை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பிரதேசத்தைச் சேர்ந்த எஸ்.டி.பிரேமரத்ன (48வயது) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சடலம், திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அர்ஜுன் மகேந்திரனை வெளியேற்றவும் நாட்டு முன்னேற்றத்துக்கு அது உகந்தது



மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை வெளியேற்றினால் மட்டுமே தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் நாட்டின் மீதான நம்பிக்கை உறுதிசெய்யப்படும் இவ்விடயத்தில் பிரதமரின் நண்பரா? இல்லையா? என்பதனைவிட நாட்டுக்கு நன்மையா? தீமையா? என்பதுதான் முக்கியம் என ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி செயலாளரும் அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் பிரதமரின் நண்பரா? இல்லையா? என்ற விடயம் முக்கியமானதல்ல. அவரால் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மையா? இல்லையா? என்பது தான் முக்கியமானதாகும். இதன் அடிப்படையிலேயே தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.

நாட்டு மக்களின் நிதி சரியான முறையில் கையாளப்பட வேண்டியது முக்கியமானதாகும். உயர்நீதிமன்றம் இவ்விடயத்தில் வெளியிட்ட தீர்ப்பை நாம் விமர்சிக்கவில்லை. ஆனால் 'கோப் குழுவின் முன்னிலையில் இவர் விசாரிக்கப்பட்ட போது தனது மருமகனின் நிறுவனத்திற்கு பங்குகளை வழங்கியதை ஒப்புக்கொண்டுள்ளார்.

கோப் குழுவில் சுட்டிக்காட்டப்பட்ட குற்றச்சாட்டுக்களை அவர் மறுக்கவில்லை.

இதனடிப்படையிலேயே அவர் மத்திய வங்கி ஆளுநர் பதவியிலிருந்து வெளியேற்றப்பட வேண்டுமென்ற வாதத்தை முன்வைக்கின்றோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் குற்றச்சாட்டுக்கள் இருப்பவர் மத்திய வங்கி ஆளுநர் பதவியில் இருக்கக்கூடாது வெளியேற்றப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார். இவ்வாறு பல்வேறுபட்ட விமர்சனங்களுக்கு உள்ளான மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தொடர்ந்தும் அப்பதவியை வகிப்பது நியாயமற்றது. அவரை அப்பதவியிலிருந்து வெளியேற்றுவதன் மூலமே தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் நம்பிக்கையை உறுதி செய்து கொள்ள முடியும் என்றார்.

### கலந்துரையாடலும் இப்தார் நிகழ்வும்

(பொத்துவில் தாஜகான்)

பொத்துவில் பிரதேசத்தில் நீண்ட காலமாக பேசு பொருளாக இருந்து வரும் பொத்துவில் கல்வி வலயத்தை பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடலும், இப்தார் நிகழ்வும் இன்று பிற்பகல் 4.30 மணியளவில் பொத்துவில் மத்திய கல்லூரியின் ஆராதனை மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொத்துவில் இன்டரெக்ட் சொசைட்டி மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வில் பொத்துவில் பிரதேசத்தில் நீண்டகாலமாக நிலவி வரும் கல்வி சம்பந்தமான பிரச்சினைகளை மக்கள் மயப்படுத்தல், கல்வி வலயத்துக்கான செயற்பாடுகளை ஊக்கப்படுத்தல், நிரந்தர ஆசிரியர்களை பெற்றுக் கொள்வதற்கான நியாயமான செயற்பாடுகளை முன்னெடுத்தல் என்னும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கலந்துரையாடலும், இப்தார் நிகழ்வும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# பாலியல் துஷ்பிரயோகங்களை எதிர்த்து வடக்கில் மக்கள் ஆர்ப்பாட்டம்




(யாழ் நிருபர் பாறுக் ஷிஹான்)

யாழ். தென்மராட்சி - வரணி பிரதேசத்திலுள்ள கல்லூரி ஒன்றில் சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமைக்கும் சாவகச்சேரியிலுள்ள தேசியப் பாடசாலை ஒன்றின் மாணவன் தாக்கப்பட்டமைக்கும் எதிர்ப்புத் தெரிவித்து, நீதி கிடைக்கக் கோரியும் தென்மராட்சி பிரதேச வாழ் மக்களால் சாவகச்சேரியில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டுள்ளது.

கவனயீர்ப்புப் போராட்டத்திலும் பேரணியிலும் ஈடுபட்டிருந்தவர்கள் 'அவதானம்! அவதானம்! பிரத்தியேக வகுப்புத் தொடர்பில் அவதானம், 'அச்சுறுத்தாதே! அச்சுறுத்தாதே! சிறுவர் உரிமைகளைக் தட்டிக்கேட்கும் உத்தியோகத்தர்களை அச்சுறுத்தாதே' இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டவர்கள் நேற்று காலை 11 மணியாவில் சாவகச்சேரி பேருந்து தரிப்பு நிலையத்திலிருந்து ஆரம்பித்து தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனையைச் சென்றடைந்து அங்கு வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமாரிடம் மனுவொன்றைக் கையளித்தனர்

அதனைத் தொடர்ந்து பேரணி, தென்மராட்சிப் பிரதேச செயலாளர் அ. சாந்தசீலனிடம் இரு மனுக்களை கையளித்ததுடன், அரச அதிபருக்கான மனுவும் கையளிக்கப்பட்டது. கடந்த வாரம் வரணிப் பிரதேசத்திலுள்ள பிரபல கல்லூரி ஒன்றின் சிறுமி அதே பாடசாலையின் ஆசிரியரால் பிரத்தியேக வகுப்பின் போது பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட ஆசிரியர் மற்றும் தகவல் தெரிந்தும் அதனை மறைத்த பாடசாலையின் அதிபர், உப அதிபர் உள்ளிட்ட 9 பேர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சாவகச்சேரியிலுள்ள தேசிய பாடசாலை ஒன்றின் ஆசிரியர் மாணவன் ஒருவனை காதைப் பொத்தித் தாக்கியதால் செவிப்பறை கிழிந்த நிலையில் குறித்த மாணவன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றான். இவற்றுக்குக் கண்டனம் தெரிவித்தும் குற்றவாளிகள் தப்பித்துவிடக்கூடாது என்பதை வலியுறுத்தியுமே இந்த கவனயீர்ப்புப் போராட்டமும் பேரணியும் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடல் அடிப்பரப்பை துப்பரவு செய்யும் வேலைத்திட்டம் அமைச்சர் றிஷாத் பதியுதீனால் ஆரம்பிப்பு



( எம்.ஐ.எம்.அஸ்ஹர்)

சாய்ந்தமருது பிரதேச கடலின் அடிப்பரப்பை துப்பரவு செய்யும் வேலைத் திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியத் தலைவரும் கைத்தொழில் வணிக அமைச்சருமான றிஷாத் பதியுதீன் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.


கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தை தொடர்ந்து இக்கடல் பகுதியினுள் கட்டிட இடிபாடுகள் மற்றும் கழிவுப் பொருட்கள் அள்ளுண்டு சென்று தேங்கிக் கிடப்பதனால் அவை மீன்பிடி தொழிலுக்கு பெரும் இடையூறாக இருந்து வருகின்றது.

இதனால் கரைவலை மீன்பிடி தொழில் கடந்த பல வருடங்களாக வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் வலைகள் வெட்டுப்படுவதனால் தாம் நஷ்டமடைவதாகவும் இப்பிரதேச மீனவர்கள் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதித் தலைவரும் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முஸ்லிம் காங்கிரஸ் குழுத்தலைவருமான கலாநிதி ஏ.எம்.ஜெமீலின் கவனத்திற்கு கொண்டு வந்ததைத் தொடர்ந்து அவர் அமைச்சர் றிஷாத் பதியுதீனிடம் விடுத்த வேண்டுகோளை ஏற்று அமைச்சர் மேற்படி வேலைத் திட்டத்திற்காக 10 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இவ்வேலைத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை கலாநிதி ஏ.எம்.ஜெமீல் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மீனவர்கள் எதிர்நோக்கி வருகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும் அமைச்சர் றிஷாத் பதியுதீனுடன் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் கட்சியின் தவிசாளரும் பிரதி அமைச்சருமான எம்.எஸ்.அமீர் அலி, பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



கடந்த அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் நீச்சல் தடாகம் நிர்மாணிக்கப்பட்டு இரண்டு வருடங்களாகியும் திறக்கப்படாத நிலையில் காணப்படுவதோடு, விளையாட்டுத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவராக இருப்பதனால் இதனைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு பழைய மாணவர்களும், பாடசாலை நலன்விரும்பிகளும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(படம்-அக்கரைப்பற்று விசேட நிருபர்)

# முஸ்லிம் ஆளுநர் நியமனம் நிச்சயம் இடம்பெற வேண்டும்


## முன்னாள் எம்.பி அஸ்வர் கோரிக்கை

(எம்.எஸ்.எம். சாஹிர்)

ஒரு முஸ்லிம் ஆளுனர் நிச்சயமாக நியமிக்க வேண்டும் இல்லாவிட்டால் அது பெரும் குற்றமாகவும் குறையாகவும் முஸ்லிம்கள் சமுதாயத்திலே காணப்படும் என முன்னாள் முஸ்லிம் சமய கலாசார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் அதில் தெரிவித்துள்ளதாவது,

நோன்பு திறக்கும் வைபவமொன்றுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க பேருவளை சென்றிருந்த போது, ஒரு முஸ்லிம் ஆளுனரை நியமிக்க வேண்டும் என்று அங்குள்ள தலைவர்கள் வேண்டிக் கொண்டுள்ளார்கள். இது நிச்சயம் நடக்க வேண்டும். ஏனென்றால், மாகாண சபைகள் உருவாகிய பொழுது, தென் மாகாணத்துக்கு முதல் ஆளுனராக எம்.ஏ. பாக்கீர் மாக்கார் நியமனம் பெற்றார். மேல் மாகாணத்துக்கு செய்யத் மர்ஹூம் அலவி மௌலானா நியமனம் பெற்றார்.



அவர் பதவிக்காலம் முடிவடைந்த பிறகு யாரும் ஒரு முஸ்லிம் ஆளுனரை நியமிக்கவில்லை. இதுவும் அரசியல் ரீதியிலே முஸ்லிம் சம்பந்தமாக ஒரு பாதிப்பை ஏற்படுத்தி, ஓர் ஏக்கத்தை, ஏமாற்றத்தை முஸ்லிம்கள் மத்தியிலே ஏற்படுத்தக் கூடியது. ஒரு முஸ்லிம் ஆளுனர் நிச்சயமாக நியமிக்க வேண்டும் இல்லாவிட்டால் அது பெரும் குற்றமாகவும் குறையாகவும் முஸ்லிம்கள் சமுதாயத்திலே காணப்படும்.

எனவே, முஸ்லிம் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாகச் சேர்ந்து இந்த விடயத்தை ஜனாதிபதி மட்டத்திலே பேசி இவைகளுக்கு ஒரு முடிவு கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் சமூகத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

### ஓ. பொஸிடிவ் சிறுநீரகம் தேவை

(பேருவளை நிருபர்)

பேருவளை சீனன் கோட்டை பாரி ஹாஜியார் மாவத்தை இலக்கம் 35/27 வசிக்கும் பி.எம்.எஸ். ஸித்தி ஸுஹைறா (வயது 58) கடுமையான சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு உடனடியாகவே சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை தேவை என சிறுநீரக சத்திர நிபுணர் டாக்டர் ஏ.எல்.எம் நஸார் தெரிவித்தார். ஓ பொஸிடிவ் கொண்ட சிறுநீரகம் இவருக்கு தேவைப்படுகிறது.

இதனை வழங்க விரும்புவோர் 0777 703032, 0717123807 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

### மக்கள் பணிமனையின் இப்தார் நிகழ்வு

(யாழ்.நிருபர் பாறுக் ஷிஹான்)

மக்கள் பணிமனை அனுசரணையில் அதன் தலைவர் மௌலவி சுபியானின் வழிகாட்டலில் யாழ் அபூபக்கர் ஜும்மா பள்ளிவாசலில் இப்தார் நிகழ்வு ஒன்று வெள்ளிக்கிழமை(25) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் போது அதிகளவான நோன்பாளிகள் கலந்து கொண்டனர்.இந்நிகழ்வில் பள்ளிவாசல் நிர்வாகத் தலைவர் கியாஸ் செயலாளர் எம்.றிஸ்வான் ஆகியோர் கலந்து கொண்டனர்.அத்துடன் இரவு வேளை உணவும் நோன்பாளிகளுக்கு வழங்கப்பட்டது.

### நளீமிய்யா பழைய மாணவர்களின் இப்தார் வைபவம் இன்று

(பெரியநீலாவணை நிருபர்)

அம்பாறை மாவட்ட றாபிததுன் நளிமிய்யீன்- நளிமியா பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள இப்தார் வைபவம் இன்று (28) பி.ப. 5.00மணிக்கு இடம்பெறவுள்ளது. பழைய மாணவர்கள் அமைப்பின் தலைவர் அஷ்செய்க் எப்.எம். எஸ்.ஏ.அன்சார் மௌலானாவின் தலைமையில் கல்முனை பிஸ்மில்லா ஹோட்டலில் நடைபெறவுள்ள நிகழ்வில் மாவட்டத்தின் அனைத்து நளீமிக்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# ஆற்று நீரை குடிநீராக பயன்படுத்திய கிராமத்துக்கு மஸ்தான் எம்.பி. குடிநீர் வசதி

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பிஹிடியா பாம் பழைய குடியேற்ற கிராம மக்கள் இதுவரை காலமும் குடிநீருக்காக ஆற்று நீரை பயன்படுத்தி வந்த நிலையில் அவர்களுக்கான குடி நீர் வசதியினை செய்து தருவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான கே.காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

குறித்த கிராம மக்களால் பல அரசியல் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் யாரும் அங்கு செல்லாத நிலையில் அண்மையில் அப்பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்த அவர் மக்களின் குறைநிறைகளை கேட்டறிந்தார்

அத்துடன் தாம் மல்வத்து ஓயா ஆற்றை அண்டியவாறாக பல தசாப்தங்களுக்கும் மேலாக குடியிருப்பதாகவும் இதுவரை காலமும் தாம் குடிப்பதற்கு ஆற்று நீரையே பயன்படுத்துவதாகவும் அக்கிராம மக்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து குறித்த கிராம மக்களுக்கு முதற்கட்டமாக தாம் ஒரு மாத காலத்துக்குள் குழாய்க்கிணறு ஒன்றை தனது சொந்த செலவில் அமைத்து தருவதாக மஸ்தான் எம்.பி தெரிவித்தார். மேலும் தாம் அரசியலுக்கு வரும் முன்னரே இவ்வாறான உதவிகளை மக்களுக்கு செய்து வருவதாகவும் தமது விஸ்தரிக்கப்பட்ட சமூக சேவையினை மக்களுக்கு வழங்கவே தான் அரசியலுக்கு வந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சவளக்கடை லைப்லைன் இப்தார் நிகழ்வு





(எம்.முஹம்மட் ஜபீர், சம்மாந்துறை)

சவளக்கடை 6ஆம் கிராமம் லைப் லைன் சமூக சேவைகள் அமைப்பு முதல்முறையாக ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வும் பள்ளிவாசல்களுக்கு ஒரு தொகுதி கதிரைகள் அன்பளிப்பு நிகழ்வும் லைப் லைன் சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் ஏ.எல்.பைசாத் தலைமையில் (23) வியாழக்கிழமை 6ஆம் கிராம பிலால் ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு சவளக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம்.எம்.நஜீம், முன்னாள் நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினரும் எதிர்கட்சி தலைவருமான எம்.ஜ.தாஜப்தீன், நாவிதன்வெளி பிரதேச ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைப்பாளர் ஏ.சீ.நிஸார், பிலால் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் ஏ.அபூபக்கர், அமைப்புகளின் பிரதிநிகள், வர்த்தகர்கள், பொது மக்கள், இளைஞர்கள், விளையாட்டுக் கழக பிரநிதிகள், கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள், என பலரும் கலந்துகொண்டனர்.

இவ் அமைப்பானது உருவாக்கப்பட்டு இரண்டு மாதங்கள் நிறைவடைந்த நிலையில் வெளிநாட்டில் தொழில் புரிந்துவரும் கிராம புற இளைஞர்கள் மற்றும் சமூக சிந்தனையாளர்களினால் இவ் அமைப்புக்கான நிதியை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தனியார் பஸ் பணி பகிஷ்கரிப்பில் வடபகுதி மக்கள் பாதிப்பு

தனியார் போக்குவரத்துச் சேவைகள் வட மாகாண ரீதியில் பணிப் பகிஸ்கரிப்பை மேற்கொண்டு வருவதனால் தொழிலுக்குச் செல்லும் பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் அன்றாட நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இந்த நிலையில் தனியார் போக்குவரத்து சங்கத்தினருக்கும் வடமாகாண ஆளுநருக்கும் இடையில் இன்று ஆளுநர் அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் பேருந்திற்கு 60 வீதமும், இலங்கை அரச போக்குவரத்துச் சேவை பேருந்திற்கு 40 வீதமும் என்ற விகிதாசாரத்தில் கடந்த 3 வருட கால முயற்சியின் பின்னர் இணைந்த நேர அட்டவணை தயாரிக்கப்பட்டது.

எனினும் இலங்கை அரச போக்குவரத்துச் சேவை இதற்கு ஒத்துழைப்பு வழங்காத நிலையில் அத்துமீறிய சேவையை மேற்கொண்டு வருவதாக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தவிடயம், தொடர்பில் மத்திய அரசுடனும், மாகாண அரசுடனும் சந்திப்புக்களை ஏற்படுத்தியும் எந்தவித பலனும் இதுவரை எட்டப்படவில்லை எனவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் பயணிகளின் பாதுகாப்பான பயணத்தை கருத்திற்கொண்டு, இன்று திங்கட்கிழமை முதல் தீர்வு கிடைக்கும் வரை வடமாகாணம் முழுவதும் பணிப் பகிஸ்கரிப்பை மேற்கொள்ளவுள்ளதாக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

# லைலதுல் கத்ர்

நிச்சயமாக நாம் அதை (குர்ஆனை) கண்ணியமிக்க (லைலத்துல் கத்ர்) என்ற இரவில் இறக்கினோம். மேலும் கண்ணியமிக்க இரவு என்ன என்பதை உமக்கு அறிவித்தது எது? கண்ணியமிக்க(அந்த) இரவு ஆயிரம் மாதங்களை விட மிக்க மேலானதாகும். அதில் மலக்குகளும், ஆன்மாவும் (ஜிப்ரயீலும்) தம் இறைவனின் கட்டளையின் படி (நடைபெற வேண்டிய) சகல காரியங்களுடன் இறங்குகின்றனர். சாந்தி (நிலவியிருக்கும்) அது விடியற்காலை உதயமாகும் வரை இருக்கும். (அல்குர்ஆன் 97:1,5)

1) அல்லாஹ்வை ஈமான் கொண்டவராகவும், நன்மையை எதிர்பார்த்தவராகவும் ரமளான் மாதத்தில் யார் நோன்பு நோற்கின்றாரோ அவரின் முன் சென்ற பாவங்கள் மன்னிக்கப்படும். லைலத்துல் கத்ர் இரவில் அல்லாஹ்வை ஈமான் கொண்டவராகவும் நன்மையை எதிர்பார்த்தவராகவும் யார் நின்று வணங்குகின்றாரோ அவரின் முன் பாவங்கள் மன்னிக்கப்படும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புகாரி)

2) ரமழான் மாதத்தின் கடைசிப் பத்தின் ஒற்றைப்படை நாட்களில் லைலத்துல் கத்ரின் இரவை தேடிப் பெற்றுக்கொள்ளுங்கள், என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புகாரி)

3) நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு லைலத்துல் கத்ரின் இரவை அறிவித்துக் கொடுப்பதற்காக வெளியில் வந்தார்கள். அப்போது இரண்டு பேர் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொண்டார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். லைலத்துல் கத்ரின் இரவை உங்களுக்கு அறிவித்துக் கொடுப்பதற்காக நான் வெளியாகி வந்தேன். இரண்டு பேர் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டதின் காரணமாக அல்லாஹ் அதை பற்றிய செய்தியை உயர்த்தி விட்டான் என்றுகூறி, அது உங்களுக்கு நலவாக இருக்கக் கூடும் என்றார்கள். ஆகவே, அதை இருபத்தி ஒன்று, இருபத்தி மூன்று, இருபத்தி ஐந்து, இருபத்தி ஏழு, இருபத்தி ஒன்பது ஆகிய நாட்களில் தேடிப்பெற்றுக் கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புகாரி)

4) அல்லாஹ்வின் தூதரே! லைலத்துல் கத்ரின் இரவை நான் அறிந்து கொண்டால் அதில் என்ன கூறவேண்டும் என்று கேட்டேன். இவ்வாறு கூறுமாறு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அல்லாஹும்ம இன்னக்க அஃப்வுன் துஹிப்புல் அஃப்வ ஃபஃபுஃபு அன்னீ


பொருள்: இறைவா! நிச்சயமாக நீ மன்னிக்கக்கூடியவன். மன்னிப்பை விரும்புகின்றாய். என்னை மன்னிப்பாயாக. (அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி) ஆதாரம்: திர்மிதி)

விளக்கம்: லைலத்துல் கத்ர் என்பது, ரமளான் மாதத்தின் கடைசிப்பத்தின் ஒற்றைப்படை நாட்களில் வரக்கூடிய ஓர் இரவிற்குச் சொல்லப்படும். இந்த இரவில் செய்யும் வணக்கத்திற்கு ஆயிரம் மாதங்கள் செய்யும் வணக்கத்திற்குக் கிடைக்கும் நன்மையை விட அதிக நன்மைகளை, அல்லாஹ் வழங்குகின்றான்.

அதாவது ஒரு இரவு செய்யும் அமலினால் 83 வருடங்கள் செய்யும் அமலுக்குக் கிடைக்கும் நன்மையை விட அதிக நன்மைகள் கிடைக்கின்றது.

இதனால்தான் நபி (ஸல்) அவர்கள் அந்த இரவை அடைந்து கொள்வதற்காக நோன்பின் கடைசிப்; பத்து நாட்களில் இஃதிகாஃப் இருப்பார்கள். '83 வருடம் நாம் வாழ்வோமா?' என்பதே கேள்விக்குறியானது! ஆனால் ஒரு இரவில் செய்யும் அமலுக்கு அவ்வளவு நன்மையை அல்லாஹ் நமக்கு அள்ளி வழங்குகின்றான். இந்த அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள். ரமளான் மாதத்தின் மற்ற 20 நாட்களை விட கடைசிப் பத்து நாட்களில் நபி (ஸல்) அவர்கள் அதிக வணக்கத்தில் ஈடுபடுவார்கள். முன் பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நபி (ஸல்) அவர்களே இப்படி அதிக அமல்கள் செய்திருக்கும் போது, நம்மைப் போன்றவர்கள் எவ்வளவு அதிகம் அமல்களில் ஈடுபட வேண்டும் என்பதை சிந்தித்துப்பாருங்கள்!

ஆகவே, இச்சிறப்பான இரவில் தொழுவது, குர்ஆன் ஓதுவது, திக்ர் செய்வது, பாவமன்னிப்புத் தேடுவது, தர்மம் செய்வது போன்ற நற்கருமங்களில் நாம் அதிகம் ஈடுபடவேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் அந்த சிறப்பான இரவைப் பெற்று, நல் அமல்கள் புரிய வாய்ப்பளிப்பானாக!




**வாசகர்களே!**

உங்களது தரமான ஆக்கங்களை அல் ஜன்னத் பகுதி நாளாந்தம் பிரசுரிக்க உள்ளது.

எனவே, உங்களது சொந்த ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம்.

**"Al - JANNATH"**
**156, Hospital Road,**
**Kalubowila, Dehiwala.**

# யார் பயபக்தியுள்ளவர்?

❋ அஷ்ஷெய்க் மஸிஹுத்தீன் இனாமுல்லாஹ் (நளீமி)

(நன்மை செய்வோர் யார் எனின்) எவர்கள் (அறியாமல் ஏற்பட்டுவிடும்) சிறு பிழைகளைத் தவிர பெரும் பாவங்களையும் மானக்கேடானவற்றையும் தவிர்த்துக் கொள்கிறார்களோ அவர்கள், நிச்சயமாக உம்முடைய இறைவன் மன்னிப்பதில் தாராளமானவன், அவன் உங்களைப் பூமியிலிருந்து உண்டாக்கிய போது, நீங்கள் உங்கள் அன்னையரின் வயிறுகளில் சிசுக்களாக இருந்த போதும், உங்களை நன்கு அறிந்தவன் - எனவே, நீங்களே உங்களைப் பரிசுத்தவான்கள் என்று புகழ்ந்து கொள்ளாதீர்கள் - யார் பயபக்தியுள்ளவர் என்பதை அவன் நன்கறிவான். (ஸூரத் அல் நஜ்ம் 53:32)

'புனித ரமழான் மாதத்தினை அடைந்தும் ஒருவன் பாவமன்னிப்புப் பெறாமல் மரணித்தால் அவன் நரகம் செல்லட்டும், அல்லாஹ் அவனை தூரமாக்கட்டும்' என வானவர் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் கேட்டதுஆவிற்கு தான் ஆமீன் சொன்னதாக எங்கள் உயிரிலும் மேலான தலைவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

பாவ மன்னிப்பு கோரல் 'தவ்பா' என்பது ஒரு அடியானுக்கும் அவனது இரட்சகனுக்கும் இடையே இடம்பெறும் மிகத் தூய்மையான இதயசுத்தியுடன் கூடிய முனாஜாத் ஆகும், பாவங்களில் இருந்து தவிர்ந்து கொள்ளுதல், இடம்பெற்ற பாவங்கள் குறித்த வருந்துதல், பாவத்தில் மீள்வதில்லை என்ற திடசங்கற்பம் கொள்ளுதல் போன்ற பிரதான நிபந்தனைகளோடு மற்றுமொரு பிரதான நிபந்தனை இருக்கின்றது.

மனிதன் அல்லாஹ்வினுடைய விடயத்தில் அல்லது தனிப்பட்ட விடயங்களில் இழைத்த தவறுகள் அல்லாத பிற அடியார்கள் விடயத்தில் இழைத்த குற்றங்களிற்காக அவர்களிடம் உரியவிதத்தில் மன்னிப்பு கேட்டுக் கொள்ளுதல் மற்றுமொரு நிபந்தனையாகும்.

பெற்றார்கள் விடயத்தில் தவறிழைத்தவர்கள் அவர்களது மன்னிப்பை பெறாவிடின், இரத்த உறவுகளை துண்டித்து வாழ்பவர் அவர்களுடனான உறவுகளை சீர்செய்து கொள்ளாவிடின் அவர்களுடைய எந்த அமல்களும் துஆக்களும் அல்லாஹ்வை அடைவதில்லை அல்லாஹ் அவர்களுடனான உறவினை துண்டித்துக்கொள்கின்றான் என ஹதீஸுகள் தெரிவிக்கின்றன.

ஒருவருக்கு அநீதி இழைத்திருந்தால் அவரிடம் உரிய பரிகாரத்துடன் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுதல் வேண்டும் அநீதி இழைக்கப் பட்டவரின் துஆவிற்கும் அல்லாஹ்விற்கும் இடையில் திரை கிடையாது, அநீதி இழைப்போருக்கு அல்லாஹ் அல்-குர்ஆனில் கடுமையான எச்சரிக்கைகளை விடுத்துள்ளான்.

கொடுக்கப்படவேண்டிய கடன்களை வசதியிருந்தும் செலுத்தாது இருந்தால் அல்லது திருப்பிச்செலுத்துகின்ற எண்ணம் இல்லாது கடன்தந்தவரை ஏமாற்றிக் கொண்டு நோவினை செய்து கொண்டிருந்தால் நிச்சயமாக அவரது பாவங்கள் மன்னிக்கப் படமாட்டாது.

மற்றோருவரது பொருளை, பணத்தை, தொழிலை, அந்தஸ்தை திருடி இருந்தால் அல்லது குறுக்கு வழிகளில் தான்அடைந்திருந்தால் ஏழைகள், அனாதைகள் விதவைகளுக்கு சேரவேண்டியதை அபகரித்திருந்தால்,

வரதட்சணை என்ற பெயரில் பலருக்கும் சேர வேண்டிய சொத்துக்களை சூறையாடி இருந்தால் அவற்றை திருப்பிக்கொடுக்காதவரை அல்லது பாதிக்கப் பட்டவர்கள் மனமுவந்து மன்னிக்காதவரை அல்லாஹ் மன்னிக்க மாட்டான்.

இலஞ்சம், ஊழல் ,மோசடிகளில் ஈடுபடுவோர், மக்களது அபிவிருத்தி நிதிகளை சூறையாடுவோர் மக்களிற்கும் தேசத்திற்கும் துரோகமிழைப்போர் ஒவ்வொரு வரியிருப்பாளனது உரிமைகளிலும் கைவைப்பதனால் அவர்களுக்கு உரியவர்களிடம் அவற்றை திருப்பிக் கொடுத்து மன்னிப்புக் கேட்காதவரை அவர்களுக்கு மன்னிப்புக் கிடையாது, அவர்கள் மோசடியாக திருடியவைகளை சுமந்துகொண்டு நாளை மஹ்ஷர் மைதானத்திற்கு வருவார்கள்.

இலஞ்சம் ஊழல் மோசடிகளுக்கு துணைபோவோர்கள் அவற்றால் பயனடைவோர்கள் அது மெகா விருந்துகளாக, கொடுப்பனவுகளாக, கையூட்டல்கள் சந்தோஷங்களாக, இப்தார்களாக இருந்தாலும் சரியே பாவத்தில் பங்காளிகள் ஆவார்கள்.

கோள்புறம்பேசித்திரிவோர், அவதூறு சொல்வோர், இட்டுக் கட்டி புனைகதைகளை கூறி அடுத்தவர் மானத்தில் கைவைப்போர், பரிகாசம் செய்வோர், பகிடிவதை செய்வோர், பிறரை கேளி செய்வோர் உரியவர்கள் மன்னிகாத வரை அல்லாஹ்வால் மன்னிக்கப் படுவதில்லை.

வட்டி எடுப்போர், கொடுப்போர் அதில் தொழில் பார்ப்போர் தவ்பா அங்கிகரிக்கப் படுவதில்லை.

பொய் சாட்சி சொல்வோர் தவ்பா அங்கீகரிக்க படுவதில்லை, தேர்தல்களில் ஊழல் மோசடி பேர்வழிகளிற்கு வாக்களிப்பதுவும் பொய் சாட்சியாகும்.

அளவை நிறுவைகளில் மோசடிசெய்வோர், பொய் கூறி ஏமாற்றி கலப்படம் செய்து வியாபாரம் செய்வோர் அவர்கள் ஏமாற்றியவைகளை நாளை கியாமத்து நாளில் சுமந்துகொண்டு வருவார்கள், ஏமாற்றப் பட்டவர்கள் மன்னிக்காதவரை அல்லாஹ் மன்னிக்கமாட்டன்.

அமானிதங்களை பாழ் படுத்துவோர், வக்பு சொத்துக்களை சூறையாடுவோர், வக்புநிதிகளில் பொதுசொத்துக்களில் கையாடல்செய்வோர் அவற்றை உரியவர்களிற்கு ஒப்படைக்கும் வரை பாவங்கள் மன்னிக்கப் படுவதில்லை.

இவ்வாரு பல்வேறு விடயங்களில் பெற்றார்களிற்கு உறவுகளிற்கு உடன் பிறப்புகளிற்கு, அண்டை அயலவருக்கு, ஏனைய மனிதர்களிற்கு, ஊரிற்கு சமூகத்திற்கு , தேசத்திற்கு தாம்இழைத்த தவறுகள் குற்றங்களிற்கு உரியவிதத்தில் பரிகாரம் பெறாது அல்லாஹ்விடம் தவ்பா செய்தால் அது அங்கீகரிக்கப் படமாட்டாது.

காலம் கடந்து கைசேதப்பட்டு உரியவர்களிடம் உரியவிதத்தில் மன்னிப்புக் கோரும் அவகாசம் இல்லாது போனால் என்ன செய்வது என்பதனை தத்தமது நிலவரங்களுக்கு ஏற்ப அறிஞர்களிடம் உலமாக்களிடம்கேட்டு தெரிந்துகொண்டு தவ்பா செய்து கொள்ளலாம்.

எல்லாம் வல்ல அல்லாஹ் எங்கள் அனைவருக்கும் உரியவிதத்தில் தவ்பா செய்து பாவங்களில் இருந்து மீண்டு நல்லடியார்களாக வாழ்ந்து அவனிடம்மீள அருள்புரிவானாக!





மக்கா நகரைச் சுற்றி வலம்வரும் பாதுகாப்பு விமானம் ஒன்றின் விமானி மற்றும் சவூதி கேசட் ஊடகவியலாளர் தரையில் இருந்து 2500 அடிகள் மேலே இருந்து விமானத்தில் நோன்பு திறப்பதை படத்தில் காணலாம்.

**16**

**2016 ஜூன் 28**

ஹிஜ்ரி 1437 ரமழான் 22

**நவமணி மற்றும் ஜம்மியத்துஷ் ஷபாப் நிறுவனம் நான்காவது தடவையாக இணைந்து நடாத்தும் மாபெரும் பரிசுப்போட்டி**

ரமழான் முபாறக் பரிசு மழை

நவமணி

| போட்டி - 01 (திங்கள் – வியாழன்) | போட்டி - 02 (வெள்ளிக்கிழமை) |
|---|---|
| 1ஆம் பரிசு : உம்ரா பொதி<br>2ஆம் பரிசு : மடிக் கனனி<br>3ஆம் பரிசு : ஸ்மார்ட்போன்<br>22 ஆறுதல் பரிசுகள் | கட்டுரைப் போட்டியில் முதல் 3 இடங்களுக்கு பெறுமதியான பரிசில், நினைவுச் சின்னம், சான்றிதழ் வழங்கப்படும் |

## போட்டி நிபந்தனைகள்

- தினமும் 5 கேள்விகள்
  - 2 பல்தேர்வு வினாக்கள் (விடையை தெரிவுசெய்தல்)
  - 3 கேள்விகளுக்கு விடைகளை எழுதவேண்டும்
- 30 நாள் கேள்விகளில் 25 நாட்களுக்கு மாத்திரம் விடையளித்தல் போதுமானது. (5 நாட்களுக்கு விடையளிக்காது விடலாம்)
- வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படும் தலைப்புக்கு (போட்டி 02) 200 சொற்களில் கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.
- போட்டி 02 இல் பங்குபற்றுவது விருப்பத்துக்குரியது
- போட்டி 01 மற்றும் 02 இற்கான விடைகளை ஒட்டுமொத்தமாக ஜூலை 31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். தனியாக அனுப்பப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- போட்டிகளின் முடிவுத்திகதி - ஜூலை 31, 2016

01. இலங்கை சுதந்திரத்துக்காக போராடிய முஸ்லிம் தலைவர்களில் ஒருவர்

[ ] சேர் ராஸிக் பரீத் [ ] ரீ.பீ. ஜாயா
[ ] வாப்பிச்சி மரைக்கார் [ ] என்.பீ.எம். அப்துல் காதர்

02. புனித அல்குர்ஆனை குறிக்கும் இரு பெயர்கள்,

[ ] அல் கலாம் - அஸ் ஸிக்ர் [ ] அஸ் ஸிக்ர் - அல் புர்கான்
[ ] அல் புர்கான் - அஸ் ஸிக்ர் [ ] அல் புர்கான் - அந்நூர்

03. பிர்அவ்ன் மரணிப்பதற்கு முன் அல்லாஹ்வை விசுவாசிப்பதாக கூறினான். அவனது ஈமான் அங்கீகரிக்கப்படுவதில்லை என்ற குர்ஆன் ஆயத்தை மொழிபெயர்ப்புடன் எழுதுக?

04. அல்லாஹ்வின் பாதையில் புனித யுத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கு மலக்குகளின் உதவியும் கிடைப்பதாக அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. இது பற்றிய ஆயத்தை எழுதுக?

05. மறுமையில் ஒரு மனிதனிடம் நான்கு கேள்விகள் கேட்கப்பட அதில் பதில் கூறாதவரை நகர முடியாது. அது பற்றிய நபிமொழியினை ஆதாரத்துடன் எழுதுக?

நவமணி **போட்டி - 16** நவமணி
**28.06.2016 - செவ்வாய்கிழமை**

பெயர் :......................................

முகவரி :......................................

தொலைபேசி :......................................

தே.அ.அ. இல. :......................................

கையொப்பம் :......................................

**Freelanka Media Ltd, 156, Hospital Road, Kalubowila, Dehiwala**

மேலதிக விபரங்களுக்கு 0778751032, 0772604964

# மரணத்தை வென்ற மனிதாபிமானம்

✻ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

இயற்கை செயற்கை இடர்கள், விபத்துகள், அசம்பாவிதங்கள், தற்செயல் நிகழ்வுகளால் உயிரிழப்புகள் ஏற்படுவது இயல்பு. ஆனால், இவ்வாறான வேளைகளில் நடைபெறும் பல மனிதாபிமான செயற்பாடுகள் நமக்கு படிப்பினையாக அமைகின்றது.

இவ்வாறு இன, மத பேதங்களை கடந்த உண்மையும் உயிரோட்டமுமான மெய்சிலிர்க்க வைக்கும் மனிதாபிமான நிகழ்வொன்று கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு உன்னிச்சையில் நடைபெற்றது. இச்சம்பவத்தை தன்னால் மறக்கமுடியாதிருப்பதாக ஏறாவூர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் லோகித ராஜா தீபாகரன் கூறுகிறார்.

சம்பவ தினத்தன்று மட்டக்களப்பு ஓட்டமாவடி மீராவோடையை சேர்ந்த நண்பர்கள் நான்கு பேர் வெளிநாடு செல்ல உத்தேசித்திருக்கும் தங்களது நண்பருடன் கடைசியாக குளத்தில் குளித்து விட்டு வருவதற்காக மட்டக்களப்பு உன்னிச்சை குளத்திற்குச் சென்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கே நீர் விநியோகம் செய்யும் இந்த பாரிய குளத்தை பார்வையிடுவதற்காகவும், நீராடுவதற்காகவும், பொழுது போக்குக்காகவும் பல்வேறுபட்ட ஊர்களிலிருந்தும் குடும்பம், நண்பர்கள், மற்றும் தனிப்பட்டவர்களும் செல்வது வழக்கமான விடயம்.

சனிக்கிழமையும் அவ்வாறே அந்த குளத்துக்கு பலர் வந்திருந்தார்கள். ஆனால், தற்போது ரமழான் நோன்பு காலம் என்பதால், இந்த நான்கு முஸ்லிம் இளைஞர்களை தவிர வேறு முஸ்லிம்கள் அங்கு செல்லவில்லை.

குளத்தின் வான் கதவுகள் திறந்து விடப்படும் பின்பகுதியில் தேங்கியிருக்கும் நீரில் இந்த நான்கு முஸ்லிம் இளைஞர்களும் குளித்துக் கொண்டிருந்தனர். அப்போது மீராவோடை மீரானியா வீதியை சேர்ந்த நுபீர் முஹம்மத் றிபாஸ் (வயது 22) என்ற இளைஞன் அங்கு சகதிக்குள் மூழ்கிவிட்டான்.

அவ்வேளையில் மூழ்கிய தமது நண்பனை நீரில் இருந்து மீட்க முயற்சிசெய்து தோல்வியடைந்த நிலையில் ஏனைய மூவரும் தமது நண்பனை காப்பாற்றுமாறு அவலக்குரல் எழுப்பியுள்ளனர்.

இதனை அவதானித்த அங்கிருந்த தமிழ் சகோதரர்கள் உதவிக்கு விரைந்தனர். அவர்களில் தீபாகரனும் ஒருவர். சம்பவம் பற்றி தீபாகரன் இவ்வாறு விவரித்தார்.

அந்த இளைஞன் மூழ்கியிருந்த பகுதி எமக்கு காட்டப்பட்டதும் நான் சுழியோடிகள் யாராவது இருந்தால் ஓடி வாருங்கள் என்று கூக்குரலிட்டேன். எனக்கு ஓரளவு தான் சுழியோட தெரியும். அப்போது எனக்கு முன்பின் அறிமுகமில்லாத மட்டக்களப்பு, வீச்சு கல்முனையை சேர்ந்த ஒரு தமிழ் இளைஞர் உதவிக்கு விரைந்தார்.

உடனே கயிற்றைக் கட்டிக் கொண்டு அந்த நீர்ப் பகுதிக்குள் இறங்குவதற்கு தீர்மானித்தோம். ஆனால், அந்த சுழி நீர் பகுதிக்குள் இறங்க கயிறு தேவைப்பட்டது. அங்கு எவ்வித கயிறும் இருக்கவில்லை.

இதனை அவதானித்துக் கொண்டிருந்த அங்குள்ள தமிழ் பெண்களும் யுவதிகளும் தங்களது சேலைகளையும், அணிந்திருந்த சல்வார் முந்தானை துணிகளையும் (ஷோல்) எந்தவித தயக்கமுமின்றி கயிறாக திரித்து கொடுத்தனர்.

அத்துடன் அங்கிருந்த தமிழ் பெண்களும், யுவதிகளும் இளைஞனின் உயிர் காப்பாற்றப்பட வேண்டுமென அழுது புலம்பியவாறு பிரார்த்தனையில் ஈடுபட்ட மனிதாபிமான உணர்வு மெய்சிலிர்க்கவும் கண்கலங்கவும் வைத்தது.

கயிறாக திரிக்கப்பட்ட சேலை மற்றும் முந்தானை துணிகளைக் கொண்டு நாங்கள் குளத்தில் இறங்கித் தேடுவதற்கு ஆயத்தமானோம். அப்போது கரையிலிருந்த பெண்களும் யுவதிகளும் அந்த சேலைக் கயிற்றை கரையிலிருந்தவாறு பிடித்துக்கொண்டிருந்தனர்.



மூழ்கிய இளைஞனை கண்டுபிடித்து கட்டியிழுத்து கரைசேர்த்து முதலுதவி செய்தோம். பின்னர் படையினரும் உதவிக்கு வந்து சேர்ந்தனர். உடனடியாக அருகிலுள்ள கரடியனாறு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தோம். எனினும், முயற்சி பலனின்றி இளைஞனின் உயிர் பிரிந்துவிட்டது. அந்த கடைசி நிகழ்வு என் கண் முன்னே நிழலாடுகிறது.

இளைஞனின் மரணம் இயற்கை என்றாலும், கடந்த கால கசப்புணர்வுகளால் தூரப்பட்டு போயிருக்கின்ற சமூகங்களுக்கிடையிலான இன ஐக்கியத்திற்கு அந்த இடத்தில் துளிர்த்த மனிதாபிமான உணர்வு எல்லைகளற்றது. இந்த மனிதாபிமான உணர்வு எல்லா இடங்களிலும் தளைத்தோங்க வேண்டும் என்றார்.

மரண வீட்டுக்கும் தான் சென்றதாக தீபாகரன் கூறினார். தன்னோடு உதவிக்கு வந்து நீரில் மூழ்கிய இளைஞனை காப்பாற்ற வேண்டும் என்று உடடியாக செயற்பட்ட தனக்கு முன்பின் தெரியாத மட்டக்களப்பு, வீச்சுக் கல்முனையை சேர்ந்த இளைஞனின் தியாகத்தையும் தீபாகரன் பாராட்டினார்.

அதேவேளை, இந்த உன்னிச்சை குளத்துக்கு வரும் நூற்றுக் கணக்கானோருக்கு இங்கு எந்தவிதமான பாதுகாப்பு எச்சரிக்கைகளோ, உயிர்காப்பு நடவடிக்கைகளோ முதலுதவி வசதிகளோ இல்லாமலிருப்பது கவலைக்குரியது என்று தீபாகரன் சுட்டிக் காட்டினார்.

மரணித்த இளைஞனுடைய பெற்றோர் இருவரும் கட்டார் நாட்டில் தொழில் புரிகின்றனர். அந்த இளைஞன் கடந்த 10ஆம் திகதி மக்கா சென்று உம்ரா கடமையை முடித்துவிட்டு நாடு திரும்பியிருந்தார் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

## ஹஜ் வழக்கு ஒத்திவைப்பு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கோட்டா முறை தொடர்பாக முகவர் நிலையங்கள் தாக்கல் செய்திருக்கின்ற வழக்கு பிற்போடப்பட்டு இன்று காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இம்முறை ஹஜ் கடமையை மேற்கொள்ள விண்ணப்பித்துள்ள ஹஜ் யாத்திரிகர்களில் சார்பில் தொடர்ந்துள்ள குறுக்கீட்டு மனுவே இவ்வாறு பிற்போடப்பட்டு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

கடந்த வெள்ளியன்று பிரதம நீதியரசர் ஸ்ரீபவன் தலைமையில் நீதியரசர் குழாம் இந்த இடைமனுவை ஏற்றுக்கொண்டு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## ஞானசார தேரருக்கு எதிராக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன் தெரிவித்தார்.

ஞானசார தேரர் கடந்த 21ஆம் திகதி மஹியங்கனையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது, மீண்டும் ஒரு அலுத்கமை கலவரம் வேண்டுமா என்றும் பொலிசாரையும் முஸ்லிம்களையும் அச்சுறுத்தும் தொனியிலும், இனவாதத்தை தூண்டும் விதத்திலும் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். இதற்கெதிராக முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்கா பொலிஸ்மா அதிபருக்கு கடிதமொன்றின் மூலம் முறைப்பாடொன்றையும், தேரரின் உரையை ஆதாரத்துடனும் அனுப்பி வைத்திருந்தது. பொலிஸ் மா அதிபருக்கு செய்த முறைப்பாடு தொடர்பாக வானொலியொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே தேரர் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் இழிசொற்களை பயன்படுத்தி பேசியிருந்தார்.

பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியொன்றை முஹம்மத் நபி ஊடாக அல்லாஹ்வுக்கும் அனுப்பி வைக்கவும் என்றும் ஞானசார தேரர் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பாக முஸ்லிம் கவுன்ஸிலின் பொதுச்செயலாளர் அஸ்கர் கானைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது,

சட்டம் ஒழுங்கு மற்றும் நல்லாட்சி நிலவுகின்ற ஒரு நாட்டில் பொதுபல சேனா பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரரின் வெறுக்கத்தக்க பேச்சை ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது. இந்தச் செயல் இலங்கை முஸ்லிம்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது. இலங்கையில் நடுநிலைமையான சிங்களவர்களும், ஏனைய மதத்தவர்களும் தேரரின் இந்த செயற்பாட்டை நிச்சயமாக அங்கீகரிக்கமாட்டார்கள்.

ஒரு மதத் தலைவர் இவ்வாறு இழிவாகவும், அசிங்கமாகவும் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் இழிசொற்களைப் பயன்படுத்தி பேசியிருப்பது கண்டிக்கத்தக்க விடயமாகும். நாம் அவருக்கு பதிலளிக்க போவதில்லை. ஏனெனின் அது அவரது வழமையான நடத்தையாகும்.

இது தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளதோடு ஏற்கனவே பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளதாகவும், பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அல்அக்ஸா பள்ளியில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சிவிலியன்களை அநியாயமாகக் கைது செய்து சிறையிலடைத்துள்ளனர். அவற்றில் 60 சிறுவர்களும் 21 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

கடந்த பெப்ரவரி மாதம் கத்திகுத்துக்கு எதிராக இஸ்ரேலிய அரசாங்கத்தால் இயற்றப்பட்ட சட்டத்திற்கேற்ப பொதுமக்களை கைதுசெய்து சிறையில் அடைந்து வருகின்றனர்.

## ஜுலை 07, 08இல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஆயினும் 6ஆம் திகதி பெருநாள் வந்தால் கூட 7, 8ஆம் திகதிகளில் பாடசாலை வரவு மிகக் குறைவாகவே காணப்படும். எனவே இதற்குப் பதிலாக எனைய விடுமுறை நாட்களில் பாடசாலை நடத்தும்படி வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அமைச்சர் ஹலீம் மேலும் தெரிவித்தார்.

## மத்திய வங்கி ஆளுநராக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அர்ஜுன் மகேந்திரனின் பதவிக்காலம் நாளை மறுதினம் 30 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வரும் நிலையிலேயே மேற்படிக் கட்சியானது இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

மத்திய வங்கியில் ஆளுநராக கடந்த 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலேயே அர்ஜுன் மகேந்திரன் பதவி ஏற்றுக்கொண்டார்.

ஆனால், அவர் இந்த பதவிக்கு வந்த சில நாட்களிலேயே திறைச்சேரியில் மோசடி இடம்பெற்றுள்ளதாக இவர் மீது எதிர்க்கட்சிகள் கடுமையாக குற்றம் சுமத்தியிருந்தனர்.

அன்றிலிருந்து இவரது பதவி குறித்து பல்வேறு விமர்சனங்களும், கருத்து முரண்பாடுகளும் அரச மற்றும் எதிர்த்தரப்பினரிடையே அதிகரிக்க ஆரம்பித்தன.

இந்நிலையில், இவரது பதவிக்காலம் இம்மாதத்துடன் நிறைவடையவுள்ளமையால், புதிய பதவிக்காலத்துக்கு மீண்டும் இவரையே நிறுத்திவிடக் கூடாது என ஜே.வி.பினர், மஹிந்த ஆதரவு தரப்பினர் என எதிரணி அங்கத்தவர்கள் தற்போது தொடர்ச்சியாக அரசை வலியுறுத்தி வருகின்றனர்.

அத்தோடு, அரசின் பிரதானத் தூனாக இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இவரை மறுபடியும் ஆளுநராக்கிவிடக் கூடாது எனும் நிலைப்பாட்டிலேயே உறுதியாக இருந்து வருகின்றனர்.

இதனால் இதுவரைக் காலமும் ஆளுநர் அர்ஜுனுக்கு ஆதரவாக செயற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியினரும் மாற்றுக் கருத்துகளுக்கு ஆதரவளிப்பதாக தெரிய வந்துள்ளது.

அந்தவகையிலேயே, அடுத்த ஆளுநராக பிரதியமைச்சர் ஹெரான் விக்கிரமரத்னவை நியமிக்குமாறு கட்சியின் சில உயர்மட்ட உறுப்பினர்கள் கட்சித் தலைமையிடம் வலியுறுத்தியுள்ளதாகவும் இதனை கட்சி ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தற்போது நம்பத்தகுந்த வட்டாரத்திலிருந்து அறியக்கிடைத்துள்ளது.

அதேநேரம், இப்போதைக்கு ஹெரான் விக்கிரமரத்ன தனது பிரதியமைச்சர் பதவியை இராஜினாமா செய்ய மாட்டார் என்றும் இதுவிடயத்தில் அரசே இறுதித் தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்றும் அவருக்கு நெறுக்கமானோர் சுட்டிக்காட்டினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கோத்தபாய ராஜபக்ஷ நீதிமன்றில் சாட்சியம்

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்.

கடந்த 2006ஆம்ஆண்டு கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள பித்தளை சந்தி பகுதியில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை இலக்குவைத்து குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதுதொடர்பான வழக்கு கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்ற நீதிபதி இரங்கனி பெரேராவினால் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கு குறித்து முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ வெடிப்பு சம்பவம் தொடர்பில் பின்வருமாறு விபரித்துள்ளார்.

பௌத்தாலோக்க மாவத்தையிலுள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து அலரிமாளிகைக்கு செல்லும் வழியில் பித்தளை சந்தியை திரும்பிய உடன் பாரிய வெடிப்பு சத்தம் ஒன்று கேட்டது.

நான் சென்ற வாகனத்தின் சாரதி மற்றும் பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் முன் இருக்கையில் இருந்தனர். நான் பின் இருக்கையில் இருந்தேன். எனது வாகனத்தின் கதவு பூட்டியிருந்தது. எனது பாதுகாப்பு அதிகாரிகள் என்னை வெளியில் எடுப்பதற்கு பூட்டை உடைத்தார்கள். பின் நிறைய வாகனங்கள் எரிந்ததை தான் பார்த்தேன்.

அத்துடன் 2013ஆம் ஆண்டும் இது தொடர்பில் தான் அறிக்கை ஒன்றை குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் நான் சமர்ப்பித்தேன் என்று தெரிவித்துள்ளார்.

## முஸம்மில் மனைவிக்கு எப்.சி.ஐ.டி. அழைப்பு

தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸமிலின் மனைவி நதீகா ஹர்ஷினி பொலிஸ் நிதி மோசடி குற்ற விசாரணை பிரிவுக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தார்.

கடந்த ஆட்சி காலத்தின்போது, ஜனாதிபதி செயலகத்துக்கு சொந்தமான வாகனங்களை பயன்படுத்தி 62 இலட்சம் ரூபாய் வரை அரச நிதியை மோசடி செய்தமை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்கே அவர் அழைக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

## சம்பூர் அனல்மின் திட்டம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

திட்டமிட்டிருந்தது. எனினும், அங்கு வாழ் மக்கள், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள், சிவில் சமூக பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கடுமையான எதிர்ப்பினை தெரிவித்து போராட்டங்களை மேற்கொண்டிருந்தனர்.

அத்தோடு, இவ்வாறு அனல் மின்உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதானது சம்பூரை அண்டிய பகுதிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என அரசிலுள்ள சில முக்கியஸ்தர்களும் சுட்டிக்காட்டி எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கும் எந்தவொரு செயற்பாட்டையும் தமது அரசு சம்பூரில் மேற்கொள்ளாது எனும் உறுதிமொழியை அங்கிருந்து வழங்கியிருந்தார்.

இவரது இக்கருத்தானது மேற்படி எதிர்ப்பினை வெளியிட்டவர்கள் மத்தியில் வரவேற்பு பெற்றதுடன், சம்பூரில் அனல் மின்நிலையம் ஒன்று வராது எனும் செய்தியையும் வெளியுலகுக்கு தெரியப்படுத்தியிருந்தது.

இவ்வாறு இருக்கும்போதே சம்பூரில் அனல் மின்நிலைய கட்டுமானப் பணியை அரசு கைவிட்டுள்ளது எனும் தகவலை பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா குறிப்பிட்டார்.

அதாவது, சுற்றுச் சூழலுக்கு தீங்கினை ஏற்படுத்தும் எந்தவொரு செயற்பாட்டையும் முன்னெடுக்கப்போவதில்லை எனும் நிலைப்பாட்டில் அரசு உறுதியாக இருந்தமையால், ஆரம்பம் முதலேயே சம்பூர் அனல் மின்நிலையம் குறித்த எமது நிலைப்பாட்டை தகர்த்தியே வந்தோம்.

அந்தவகையில், தற்போது அவ்விடத்தில் அனல் மின் நிலையத்துக்கு பதிலான திரவ எரிவாயு மின்உற்பத்தி நிலையம் ஒன்றை அமைக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கான ஆரம்பக்கட்டப் பேச்சுக்களும் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. வெகுவிரைவிலேயே இந்த செயற்பாட்டை எந்தவொரு சிக்கலுமின்றி நாம் மேற்கொள்வோம் என்றார்.

# சஜின் வாஸுக்கு விளக்கமறியல்

(பா. மலரம்பிகை)

சஜின் வாஸ் குணவர்தனவை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதம நீதவான் கிஹான் பிலபிடிய நேற்று உத்தரவிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன பண சலவை சட்டத்தின் கீழ் நேற்றைய தினம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டபோதே நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

வர்த்தகர் ஒருவரிடம் முறைகேடான வகையில் பணம் பெற்றுக்கொண்டார் எனும் குற்றச்சாட்டிலேயே இவர் நேற்று கைதுசெய்யப்பட்டார்.

சட்டவிரோதமாக யானைக்குட்டிகளை வைத்திருந்தமை மற்றும் அரச வாகனங்களை சட்டவிரோதமாக பயன்படுத்தியமை தொடர்பில் இவர் ஏற்கனவே சிறைக்குச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 1 இலட்சம் மரக்கன்று...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு, விகாரமகா தேவி பூங்காவில் அமைச்சர் றிஷாத் பதியுதீன் சந்தன மரக்கன்று ஒன்றை நாட்டி வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். நாடு முழுவதிலும் கூட்டுறவு, சதோச ஊழியர்கள் ஊடாக 8 இலட்சத்திற்கும் அதிகமான மரக்கன்றுகள் நடப்படவுள்ளன.

அண்மையில் பிரபல பாடகர் இராஜ் விக்கிரமரத்ன, அமைச்சர் றிசாத் பதியுதீன் ஒரு மரக்கன்றையாவது நாட்டிக் காட்டட்டும் என்று அவர் சவால் விடுத்தும் இருந்தார். இந்தப் பின்னணியில் சந்தன மரக்கன்று ஒன்றை நாட்டி வைத்த பின்னர் கருத்து வெளியிட்ட அமைச்சர்,

இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக, அமைச்சர் ஹரிசன், மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, கைத்தொழில், வர்த்தக அமைச்சின் செயலாளர் தென்னகோன் ஆகியோரும் குறைந்தது ஒரு மரக்கன்றையாவது நாட்டி வைக்குமாறு அழைப்பு விடுக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு துறை சார்ந்த நிறுவனங்கள் இந்தப் பாரிய வேலைத் திட்டத்தை இன்றே ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார். அதுமட்டுமன்றி ரோட்டறி கழகத்துடன் இணைந்து, சதொச பத்து இலட்சம் மரக்கன்றுகளை நடுவதற்கான திட்டம் ஒன்று ஏககாலத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நான் இயற்கையை நேசிப்பவன். இயற்கையின் சமநிலை கெடுவதால், மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை உணர்கின்றோம். கடந்த ஏப்ரலில் ஏற்பட்ட வெப்பநிலை மாற்றம் எமக்கு இதை உணர்த்தியது. எனவேதான் இவ்வாறன முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ளோம். இந்தப் பணிக்கு அனைவரும் உதவ வேண்

## ஐ.தே.கவில் இணைகிறார்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மேலும், தான் தலைமை வகிக்கும் ஜனநாயகக் கட்சியை கலைப்பதற்கும், எதிர்கால அரசியலை ஐக்கிய தேசியக் கட்சியுடனேயே தொடர்வதற்கும் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தீர்மானித்துள்ளார் எனவும் அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் நாளை அல்லது நாளை மறுதினம் சிறிகொத்தவில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகத்தில் விசேடக் கூட்டம் நடைபெறும் என்பதும் அதற்கிணங்க எதிர்வரும் வியாழக்கிழமை சரத் பொன்சேகா இக்கட்சியுடன் இணைந்துக்கொள்ளவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இன வெறுப்பு பேச்சுகளுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்தும் அவர் கருத்து தொிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போதும் பாராளுமன்ற தேர்தலின்போதும் இனவாத பேச்சுக்களையும் செயற்பாடுகளையும் தடுப்பதற்கு சட்டம் கொண்டு வருவோம் என நாம் வாக்குறுதியளித்தோம். இந்நிலையில் தொடர்ந்தும் தாமதிக்காது நாம் இவ்வறானதொரு சட்டத்தை கொண்டுவர வேண்டும்.

எனவே விரைவில் இனவாத பேச்சுக்களை கட்டுப்படுத்தும் சட்டம் தொடர்பிலான தனிநபர் பிரேரணையொன்றை பாராளுமன்றத்திற்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன் என்றார்.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

# இலங்கை - இங்கி. போட்டி மழையால் கைவிடப்பட்டது




இங்கிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

பிறிஸ்டலில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் நிறைவில் 9 விக்கெட் இழப்புக்கு 248 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கை அணியின் சார்பில் துடுப்பாட்டத்தில் திெனஷ் சந்திமால் 62 ஓட்டங்களையும், அணித் தலைவர் மெத்தியூஸ் 56 ஓட்டங்களையும், இளம் வீரர் குசல் மென்டிஸ் 53 ஓட்டங்களையும் பெற்றனர். இதன்மூலம் கடந்த 2012ஆம் ஆண்டுக்குப்பிறகு 3,4 மற்றும் 5ஆம் இலக்கங்களில் களமிறங்கிய வீரர்கள் அரைச்சதம் விளாசிய மற்றுமொரு சாதனையாக அமைந்தது. பந்துவீச்சில் வோக்ஸ் மற்றும் பிளங்கட் தலா 3 விக்கெட்களையும், டேவிட் வில்லே மற்றும் ஜோர்தன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆனால் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 4 ஓவர் நிறைவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 16 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் மழை குறுக்கிட்டது. தொடர்ந்து பலத்த மழை ஏற்பட்டதன் விளைவாக முடிவுகள் இன்றி போட்டி கைவிடப்பட்டது.இவ்விரு அணிகளுக்கிடையிலான 4ஆவது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் லண்டனில் இலங்கை நேரப்படி 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.




# 2ஆவது முறையாக சம்பியனானது சிலி

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் 45 ஆவது கோபா அமெரிக்க கால்பந்து தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பிரபல ஆர்ஜென்டீனாவை எதிர்கொண்ட சிலி 4க்கு 2 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்று 2ஆவது முறையாக கோபா அமெரிக்க கால்பந்து சம்பியன் கிண்ணத்தை தட்டிச் சென்றுள்ளது.

நியூ ஜெர்சியில் மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் 23 வருடத்திற்குப் பிறகு மீண்டும் சம்பியன் கிண்ணத்திற்காக போராடிய ஆர்ஜென்டீன அணியின் கோல் பெறும் முயற்சிகள் யாவும் சிலி வீரர்களால் தோற்கடிக்கப்பட்டது. அதேபோன்று சிலி வீரர்களின் முயற்சிகளும் இங்கு தோற்கடிக்கப்பட்டன.

எனவே போட்டியின் இறுதி வரை இரு அணி வீரர்களும் கோல் அடிக்கவில்லை என்பதால் இரு அணிக்கும் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. எனினும் மேலதிக நேரத்திலும் இரு அணி வீரர்களாலும் கோல்கள் பெற முடியவில்லை.

இந்நிலையில் பெனால்டி சூட் முறை அறிவிக்கப்பட்டது. இதன் போது சிலி அணியின் சார்பில் 4 கோல்களும், ஆர்ஜென்டீனா அணியின் சார்பில் 2 கோல்களும் பெறப்பட்டது.

ஆனால் ஆர்ஜென்டீன அணியின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி தனக்கான பெனால்டி வாய்ப்பை தவறவிட்டமை இரசிகர்களுக்கு ஏமாற்றம் அளித்ததுடன், பெனால்டி முறையில் தோல்வியைத் தழுவி கடந்த முறையைப் போன்று இவ்வருடமும் இறுதிப் போட்டியில் சிலியிடம் தோல்வியைத் தழுவியது.

# கால்பந்து அரங்கிலிருந்து விடைபெற்றார் மெஸ்ஸி




கோபா அமெரிக்க கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் எதிர்பாராத தோல்வியை அடுத்து உலகின் தலைசிறந்த கால்பந்தாட்ட வீரர்களில் ஒருவரான ஆர்ஜென்டீனாவின் நட்சத்திர வீரர் லியொனல் மெஸ்ஸி சர்வதேச கால்பந்து போட்டிகளிலிருந்து ஓய்வினை அறிவித்துள்ளார்.

இது குறித்து நேற்றுமுன்தினம் அறிவிப்பு வெளியிட்ட மெஸ்ஸி, என்னைப் பொறுத்த வரையில் தேசிய அணியில் எனது பங்களிப்பு நிறைவடைந்துவிட்டது. என்னால் முடிந்த அனைத்தையும் நான் செய்துவிட்டேன். ஒரு சம்பியனாக இருக்க முடியவில்லை என்பது வருத்தமாக உள்ளது. என தெரிவித்துள்ளார்.

கோபா அமெரிக்க கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு ஆர்ஜென்டீனா நான்கு முறை தகுதி பெற்றிருந்த போதிலும் ஒரு தடைவை கூட சம்பியன் கிண்ணத்தை பெற்றுக் கொள்ளவில்லை.

இம்முறை ஆர்ஜென்டீனா சம்பியன் கிண்ணத்தை பெற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஏமாற்றமே மிஞ்சியது.


நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் இரு அணிகளும் கடுமையாக போராடிய நிலையில் பெனால்டி சூட் வாய்ப்பில் 4க்கு 2 என்ற கோல்கள் அடிப்படையில் சிலி வெற்றிபெற்றது. அத்துடன் இப் போட்டியில் மெஸ்ஸிக்கு வழங்கப்பட்ட பெனால்டி வாய்ப்பு தவறவிடப்பட்டமை இரசிகர்களுக்கு ஏமாற்றத்தையே வழங்கியது.

இந்நிலையில் இப் போட்டியில் ஆர்ஜென்டீனா அணி பெற்ற தோல்வியுடன் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக 29 வயதான மெஸ்ஸி அறிவித்துள்ளார். கடந்த 2005 முதல் ஆர்ஜென்டீனா அணிக்காக விளையாடிய மெஸ்ஸி 112 சர்வதேசப் போட்டிகளில் 55 கோல்களைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், அவ்வணிக்காக சர்வதேசப் போட்டிகளில் அதிக கோல்களைப் பெற்றுக் கொண்ட ஒரேயொரு வீரரும் இவராவார்.

ஆர்ஜென்டீனாவின் கால்பந்து தெய்வமாகக் கருதப்படும் மெஸ்ஸி, 5 தடவைகள் ஆண்டின் சிறந்த வீரருக்கான பீபா விருதினையும், 4 தடவைகள் சம்பியன்ஸ் கிண்ண கால்பந்து சம்பியன் பட்டத்தையும், 8 தடவைகள் லா லீகா சம்பியன் பட்டத்தையும் பார்சிலோனா அணிக்கு தலைமை தாங்கிப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

கடந்த 3 வருடங்களில் மெஸ்ஸி பங்குபற்றி விளையாடிய 3ஆவது இறுதிப் போட்டித் தோல்வியும், ஆர்ஜென்டீனா அணிக்காக விளையாடி தோல்வியடைந்த 4ஆவது தொடர் தோல்வியும் இதுவாகும். அத்துடன் கடந்த 2014 உலகக் கிண்ணப் போட்டிகளின் போது அரையிறுதியில் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்டீனா அணி தோல்வியைத் தழுவியமை குறிப்பிடத்தக்கது.



# ஒலிம்பிக் இடைக்கால தடை: குவைத் அரசால் வழக்குத் தாக்கல்

KUWAIT GRIDIRON FOOTBALL

றியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க முடியாத வகையில் குவைத் கால்பந்து சங்கத்திற்கு சர்வதேச ஒலிம்பிக் சபையால் விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடையை எதிர்த்து ஒரு பில்லியன் டொலர் நஷ்டஈடு கேட்டு சுவிஸ் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இது குறித்து குவைத்தின் இளைஞர் மற்றும் தகவல் தொடர்புத்துறை அமைச்சர், ஷேக் சல்மான் அல்-ஹமூத் அல்-சாப் தெரிவிக்கையில், இடைக்கால தடை நடவடிக்கையை எதிர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. சர்வதேச ஒலிம்பிக் சபையின் இந்த தீர்மானம் எமது நற்பெயருக்கு தீங்கு விளைவிப்பதாக அமைந்துள்ளது. எனவே ஒரு பில்லியன் டொலர் நஷ்டஈடாக கேட்டுள்ளோம். என்று தெரிவித்துள்ளார். மேலும், குவைத் வீரர்களை றியோ ஒலிம்பிக் போட்டியிலிருந்து வெளியேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நியாயமற்ற தீர்மானம் இது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

விளையாட்டுக்களில் அரச தலையீடு காரணமாக கடந்த ஒக்டோபர் மாதம் சர்வதேச கால்பந்து சபை மற்றும் சர்வதேச ஒலிம்பிக் சபை ஆகியன குவைத் கால்பந்து சங்கத்திற்கு இடைக்கால தடை விதித்திருந்தது.

இது இவ்வாறிருக்க கடந்த ஜனவரி மாதம் குவைத்தில் உள்ள பல்வேறு விளையாட்டுத்துறை அதிகாரிகள் 16 பேர் சுமார் 1.3 பில்லியன் அமெரிக்க டொலர்இழப்பீடு வழங்கக்கோரி உள்ளூர் நீதிமன்றிலும் குவைத் அரசு வழக்கு தொடர்ந்துள்ளனர்.

# பிசிபி தலைவராக ஷகாரியார் கான்

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் பதவியில் நீடிக்க வேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கேட்டுக் கொண்டதாக ஷகாரியார் கான் தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை பாகிஸ்தான் கிரிக்கட் சபையின் தலைவராக ஷகாரியார் கான் பதவி வகிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து உள்ளூர் பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த தகவலின் பிரகாரம், ஓய்வின் பின்னர் ஷகாரியார் கானின் அடுத்த கட்ட நடவடிக்கை மற்றும் கிரிக்கட் நடவடிக்கைகள் குறித்து பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரீப்புடன் கலந்துரையாடிய போது, நவாஷ் ஷெரீப் இந்த வேண்டுகோளை விடுத்ததாகவும் அதற்கு ஷகாரியார் கான் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஷகாரியார் கானின் இரு வருட ஒப்பந்தக்காலம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்துடன் நிறைவடையவுள்ள நிலையில், பதவி விலகுவதாக ஷகாரியார் கான் கடந்த மாதம் தெரிவித்திருந்தார்.

# திரிமான்னவுக்கு உபாதை



இங்கிலாந்துக்கு கிரிக்கெட் விஜயம் செய்துள்ள இலங்கை அணி வீரர்கள் உபாதைக்குள்ளாவது தொடர்ந்த வண்ணம் உள்ளது.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரின் முதல் இரண்டு போட்டிகளில் விளையாடாமலிருந்த லஹிரு திரிமான்ன உபாதை காரணமாக நாடு திரும்பியுள்ளார்.

இதன்படி அவருக்குப் பதிலாக இங்கிலாந்து சென்றுள்ள இலங்கை ஏ அணியில் இடம் பெற்றுள்ள நிரோஷன் திக்வெல்ல பிரதான குழாமுடன் இணைந்து கொண்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

இங்கிலாந்திற்கான கிரிக்கெட் விஜயம் ஆரம்பித்தது முதல் தம்மிக்க பிரசாத், துஷ்மன்த சமீர ஆகியோர் உபாதைக்குள்ளாகி நாடு திரும்பினர். டெஸ்ட் தொடர் முடிவடைந்து தற்போது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்றுவரும் நிலையில் முதலாவது போட்டி யில் 6 ஓவர்கள் வீசிய நிலையில் அஞ்சலோ மெத்யூஸ் தொடைப்பகுதியில் ஏற்பட்ட உபாதை காரணமாக வெளியேறினார். இரண்டாவது போட்டியில் அவர் விளையாடுவது சந்தேகத்திற்கிடமான நிலையில் விளையாடிய அவர் பந்துவீச்சில் ஈடுபடவில்லை. அப் போட்டியில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய தினேஷ் சந்திமாலும் போட்டியின் போது உபாதைக்குள்ளானதால் குசல் ஜனித் பெரேரா விக்கெட் காப்பாளர் பொறுப்பை ஏற்றார். மேலும் இடது கையில் காயமடைந்த பர்விஸ் மஹ்ரூப்பும் இப்போட்டியில் விளையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நடப்புச் சம்பியனை வீழ்த்தி ப்ளூஸ்டார் அபாரம்

(பீ.எப்.எம் நிஷாட்)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பூரண மேற்பார்வையின் கீழ் இடம்பெறும் நாட்டின் முதற்தர கால்பந்தாட்டப் போட்டிகளில் ஒன்றான டயலொக் சம்பியன் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.இம்முறை 18 அணிகள் இத்தொடரில் கலந்துகொள்ளவுள்ளதுடன், போட்டிகள் ஏ மற்றும் பி பிரிவுகளாக இடம்பெற்று வருகின்றன. இதன்படி நேற்றுமுன்தினம் களுத்துறை வேர்னன் பெர்னாண்டோ மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நடப்புச் சம்பியனான கொழும்பு எப்.சீ மற்றும் களுத்துறை ப்ளூஸ்டார் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.போட்டியின் ஆரம்பம் முதலே தமது அதிரடியை வெளிப்படுத்த முயற்சித்த கொழும்பு எப்.சீ அணிக்கு ப்ளூஸ்டார் வீரர்கள் இடம்கொடுக்கவில்லை.இதில் ப்ளூஸ்டாருக்காக விளையாடும் நைஜீரிய வீரரான நசிரு ஒபயமி மற்றும் அணித்தலைவர் மஞ்சள பெர்னாண்டோ ஆகியோர் எதிரணியின் முயற்சிகளை முறியடித்தனர்.ஆனாலும் போட்டியின் முதல் பாதியில் தமக்கு கிடைத்த அரிய வாய்ப்புக்களை ப்ளூஸ்டார் வீரர்கள் இழந்ததுடன், குறிப்பிட்ட நேரத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை.அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது பாதி ஆட்டத்திலும் இதே நிலை தொடர, போட்டி நிறைவடைய ஒரு நிமிடம் இருக்க ஒபயமியின் தலையால் முட்டி வழங்கப்பட்ட பந்துப் பரிமாற்றத்தை அவ்வணியின் இம்ரான் பெற்றுக்கொள்ள அதனை மொஹிடீன் கோலாகக் மாற்றினார்.இதன்படி போட்டியில் 1க்கு 0 என ப்ளூஸ்டார் அணி வெற்றி பெற்றது. இதே வேளை,கடந்த சனிக்கிழமை பி பிரிவில் போட்டிகள் நடைபெற்றன.இதில் நிஹாரிய யூத் மற்றும் ஜாவாலேன் அணிகளுக்கிடையிலான போட்டி 1க்கு 1 என சமநிலையில் நிறைவடைந்தது.அத்துடன் பேருவளை சுப்பர் சன் மற்றும் கடற்படை அணிகளுக்கிடையிலான போட்டியில் 3க்கு 0 என்ற அடிப்படிடையில் கடற்படை வெற்றி பெற்றது.



Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 28th JUNE 2016